தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 29.11.2013

### விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

குடிமனை பட்டாதாரர்களுக்கு நிலத்தை அளந்து அத்து காண்பித்திடக் கோரி அனைந்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் உளுந்தூர்பேட்டையில் பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய அமைப்பாளர் கே.ஏழுமலை தலைமை வகித்தார். கிளை நிர்வாகிகள் மகாதேவன், ஆறுமுகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன், மாவட்ட அமைப்பாளர் டி.கலியமூர்த்தி, மாவட்டக் குழு எம்.தட்சிணாமூர்த்தி, ஒன்றியத் தலைவர்

ஆர்.கந்தசாமி, ஒன்றியப் பொருளாளர் ஜி.ஏழுமலை, ஒன்றிய அமைப்பாளர் சின்னதுரை ஆகியோர்

கண்டன உரையாற்றினர்.

### டிசம்பரில் இயற்கை வள பாதுகாப்பு மாநாடு

தென்பெண்ணை ஆற்றை பாதுகாக்க வலியுறுத்தி, இயற்கைவள பாதுகாப்பு மாநாட்டை டிசம்பரில் நடத்துவது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விழுப்புரம் மாவட்டக் குழு முடிவு செய்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விழுப்புரம் மாவட்டக் குழுக் கூட்டம் விழுப்புரத்தில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலர் ஏ.வி.சரவணன் தலைமை வகித்தார். விழுப்புரம், கடலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் புதுச்சேரி மாநிலத்துக்கு உள்பட்ட பகுதிகளில் வேளாண்மைக்கும், குடிநீருக்கும் ஆதாரமாக விளங்கும் தென்பெண்ணை ஆறு பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகிறது. ஏற்கெனவே, பெருமளவு மணல் கொள்ளை நடைபெற்றுள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. தென்பெண்ணை ஆற்றின் இரு புறங்களிலும் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. இதனால் ஆற்றின் பரப்பளவு குறைந்து வருகிறது. மேலும், நகரங்களில் சேகரமாகும் குப்பை, கழிவுகளை ஆற்றில் கொட்டுவதால் ஆற்றுநீர், சுற்றுச்சூழல் மாசுபட்டு வருகிறது.

எனவே, தென்பெண்ணை ஆற்று பிரச்னைகளுக்கு தீர்வுகாண விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை, புதுச்சேரி ஆகிய பகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் பங்கேற்கும் இயற்கை வள பாதுகாப்பு மாநாட்டை டிசம்பரில் நடத்துவது என்றும், இம் மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர்கள், புதுச்சேரி மாநிலத் தலைவர்களை பங்கேற்க அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

திண்டிவனம் கல்வி மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூரை கள்ளக்குறிச்சி கல்வி மாவட்டத்தில் சேர்க்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் சமூகநலத் துறையில் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட அரசு உதவித் தொகைகளை வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.அப்பாவு, மாவட்ட துணைச் செயலர் எம்.ஏ.கோவிந்தராஜ், மாவட்டப் பொருளாளர் ஆர்.கலியமூர்த்தி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆ.செப்ரிராஜன், கே.ராமசாமி, ஏ.குப்புசாமி, எஸ்.ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கோமாரி நோய் பாதிப்பு:புதுவையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை**

புதுவை மாநிலத்தில் கோமாரி நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கால்நடைத் துறை இயக்குநர் பி.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 6 மாதங்களுக்கு ஒருமுறை அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இறுதியாக கடந்த செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை அனைத்துத் தொழில் நுட்ப ஊழியர்கள் மூலம் முறையாக அறிவிப்பு செய்யப்பட்டு அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டது. இதன் காரணமாக புதுவையில் கோமாரி நோய் பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

புதுவை மாநிலத்தைச் சுற்றிலும் உள்ள தமிழகப் பகுதிகளில் கோமாரி நோயின் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் வெளிமாநில மாடுகள் நடமாட்டத்தைத் தவிர்க்கும் வகையில் புதுவையின் முக்கிய மாட்டுச் சந்தையான மதகடிக்கப்பட்டு சந்தையும் மூடப்பட்டுள்ளது. புதுவை மாநிலத்தில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் கால்நடை உரிமையாளர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கோமாரி நோய் அறிகுறிகள்: காய்ச்சல், உணவு உட்கொள்ளாமை, வாயில் உமிழ்நீர் வடிதல், மூச்சு இரைத்தல், கால் தாங்கி நடத்தல் போன்ற அறிகுறிகளும் இருக்கும். பின்னர் வாயிலும், நாக்கிலும் கொப்பளங்கள் ஏற்பட்டு அவை ஒன்று சேர்ந்து பெரிதாகி வாயில், நாக்கில் உள்ள தோலின் பரப்பின் மீது புண் ஏற்படுத்தும். இக் கட்டத்தில் வாயில் இருந்து நுரையுடன் கூடிய உமிழ் நீர் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். காலில் புண் வந்து கால்நடைகள் நிற்கச் சிரமப்படும். மேலும் ஈக்களின் மூலம் புழுக்கள் உண்டாகி குளம்புகள், காலில் இருந்து கழன்று விடும் அபாயம் உள்ளது.

நோய் பரவும் காலத்தில் செய்ய வேண்டியவை: கோமாரி உயிர் கொல்லி நோய் அல்ல. எனினும் தாய் மாடு நோயுற்றிருந்தால், இளங்கன்றுகளை தனியாக பிரித்து பராமரிக்க வேண்டும். நோயுற்ற கால்நடையை தனியாக பிரித்து வைத்து தனிப்பட்ட முறையில் பராமரிக்க வேண்டும். மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. மிருதுவான தவிடு, பசுந்தீவனம் போன்றவற்றை உணவாக அளிக்க வேண்டும். மாட்டு கொட்டகைகளை சுத்தமாக வைக்க வேண்டும். நோய் பரவி இருக்கும்

காலத்தில் பால் கறவை செய்யும் முன்பும், பின்பும், கறப்பவர் பொட்டாசியம் பர்மாங்கனேட் அல்லது சோப்பு நீரில் கைகளை சுத்தம் செய்த பின் பால் கறவை செய்ய வேண்டும். பிற கால்நடைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

புது கால்நடைகளை வெளியூர்களில் இருந்து வாங்கி வருவதை தடுக்க வேண்டும். நோய் தாக்கப்பட்ட கால்நடைகளின் புண்களை 0.5 சதம் சோடியம் பைகார்பனேட் (சமையல் சோடா) கலந்த நீரில் ஒரு நாளுக்கு இரண்டு முறை கழுவ வேண்டும். மேலும், புதுவையில் கால்நடை வளர்ப்போர் கோமாரி நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனே அருகில் உள்ள அரசு கால்நடை மருத்துவரை அணுகி முறையான சிகிச்சை பெற வேண்டும் என்றார் பத்மநாபன்.

**கரும்புக்கு ஆதரவு விலை: ரூ.2,650-ஆக நிர்ணயம்**

கர்நாடகத்தில் கரும்புக்கு ஆதரவு விலையை டன்னுக்கு ரூ. 2,650- ஆக உயர்த்தப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெல்காமில் புதன்கிழமை விவசாயி விட்டல் அரபாவி தற்கொலை செய்து கொண்டதையடுத்து, சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீது அவர் பேசியது:

கரும்புக்கு ஆதரவு விலைய உயர்த்த வலியுறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயி விட்டல் அரபாவி விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இது துரதிருஷ்டவசமானது.

பெல்காம் மாவட்டம், கங்கணவாடியைச் சேர்ந்த விவசாயி விட்டல் அரபாவிக்குச் சொந்தமான 2 ஏக்கர் 12 குன்டா நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு விவசாயத்தில் நஷ்டம் அடைந்த அவருக்கு, ரூ. 3 லட்சம் வரை கடன் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், பெல்காம் சட்டப்பேரவை கட்டடம் முன் கரும்பு விவசாயிகள் ஈடுபட்டிருந்த போராட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் விட்டல் அரபாவி விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவரது இறப்பிற்கு அரசு தனது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

அவரது குடும்பத்திற்கு அரசு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்க முடிவு செய்துள்ளது. மேலும், கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2,650 வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயியின் தற்கொலையை பாஜக அரசியலாக்கப் பார்க்கிறது. முந்தைய பாஜக ஆட்சியில் கர்நாடக மாநிலம், ஹாவேரியில் 2 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை அந்தக் கட்சியினர் மறந்துவிட்டு அமளியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்.

**சர்வதேச உயிர் பூச்சிக்கொல்லிகள் மாநாடு நெல்லையில் தொடக்கம்**

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் சர்வதேச அளவிலான 4-வது உயிர் பூச்சிக்கொல்லிகள் மாநாடு (பயோசிகான்) வியாழக்கிழமை தொடங்கியது.

பயிர்ப் பாதுகாப்பு, உணவு உற்பத்தியில் உயிர் பூச்சிக்கொல்லிகளின் பங்குகளை அறிந்து கொள்ளவும், அதை ஊக்குவிக்கவும் இந்த மாநாடு 2007-ல் முதன்முதலாக நடத்தப்பட்டது. இப்போது 4-வது முறையாக தூய சேவரியார் கல்லூரியில் நடைபெறுகிறது.

கல்லூரியின் பயிர்ப் பாதுகாப்பு மையம் சார்பில் 3 நாள்கள் நடைபெறும் இம் மாநாட்டின் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. மாநாட்டு ஒருங்கிணைப்புச் செயலர் கே. சகாயராஜ் வரவேற்றார். தூய சவேரியார் கல்வி நிலையங்களின் அதிபர் டேனிஸ் பொன்னையா, கல்லூரிச் செயலர் ஜே.எம். தாஸ், முதல்வர் கில்பர்ட் கமிலஸ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

அமெரிக்காவைச் சேர்ந்த உயிர்வேதிப் பொருள்கள் உற்பத்தி நிறுவன இயக்குநர் லலிதாகுமரி, மாநாட்டு மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

புதுதில்லியில் உள்ள ஆற்றல் மற்றும் வள மைய இயக்குநர் அலோக் அதோல்யா, பேராசிரியர்கள் பி. செல்வராஜ், வி. ஜெயபால், ஜே. ரோனால்ட் உள்ளிட்ட பலர் பேசினர்.

மாநாட்டில் அமெரிக்கா, சீனா, ஈரான், மேற்கிந்திய தீவுகள், சவூதி அரேபியா, நைஜீரியா, பிரேசில் உள்ளிட்ட 16 நாடுளிலிருந்தும், இந்தியாவில் இருந்தும் அறிஞர்கள், வல்லுநர்கள் என 260 பேர் பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் ஆய்வுக்காக 291 கட்டுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தானியக் கிடங்கு பூச்சிகள், வனப் பகுதி பூச்சிக்கொல்லிகள், நோய்ப் பாதுகாப்பு, நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள், தாவரப் பூச்சிக்கொல்லிகள், நானோ பொருள்கள், நன்மை தரும் பூச்சிகள், ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு ஆகிய அமர்வுகளில் இக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்படுகிறது. சனிக்கிழமை மாலை மாநாட்டு நிறைவு விழா நடைபெறுகிறது. ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

**வேளாண் உற்பத்தியை அதிகரிக்க குழுக்கள் அமைப்பு: ஆட்சியர்**

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல்வேறு உற்பத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது என ஆட்சியர் ம. ரவிக்குமார் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மற்றும் அதன் சார்புத் துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கொல்லம்பரம்பு, ஜெகவீரபாண்டியபுரம், எப்போதும்வென்றான், எட்டயபுரம், (நடுவக்குறிச்சி) இளம்புவனம் போன்ற இடங்களில் நடைபெற்று வரும் வேளாண் நலத்திட்ட வளர்ச்சிப் பணிகளை ஆட்சியர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியது:

தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பு கார் பருவத்தில் 2480 ஹெக்டேர் பரப்பில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பாசனப் பருவத்தில் நெல் சாகுபடி 15,000 ஹெக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அடிப்படையில் குழுக்களாகப் பிரித்து, அக்குழுக்களின் தலைவர் மற்றும் செயலர் மூலம் குழுக்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு துறைகள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

உற்பத்திக் குழுக்களின் தேவைகளை துறை வாரியாக பிரித்தறிந்து மாதம் ஒரு முறை ஆய்வு செய்து, ஆய்வுக் கூட்டத்தில் குழுக்களின் பிரதான தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யும் வகையில் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் 17 காய்கனி உற்பத்தியாளர் குழுக்களும், உடன்குடி வட்டாரத்தில் முருங்கை உற்பத்தியாளர் குழுக்களும், இதுபோல் மீன் உற்பத்தி, ஜவுளி உற்பத்தி போன்ற பல்வேறு உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு இடைத்தரகர்களின்றி நியாய விலை கிடைத்திட பல்வேறு துறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

ஆய்வின்போது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, துணை இயக்குநர்கள் ராஜ்குமார், குருமூர்த்தி, கிருஷ்ணகுமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ், உதவி இயக்குநர்கள் கணேசன், மதியழகன், பழநி வேலாயுதம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.பாஸ்கரன் உள்ளிட்ட

அதிகாரிகள் சென்றனர்.

**சர்வதேச உயிர் பூச்சிக்கொல்லிகள் மாநாடு நெல்லையில் தொடக்கம்**

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் சர்வதேச அளவிலான 4-வது உயிர் பூச்சிக்கொல்லிகள் மாநாடு (பயோசிகான்) வியாழக்கிழமை தொடங்கியது.

பயிர்ப் பாதுகாப்பு, உணவு உற்பத்தியில் உயிர் பூச்சிக்கொல்லிகளின் பங்குகளை அறிந்து கொள்ளவும், அதை ஊக்குவிக்கவும் இந்த மாநாடு 2007-ல் முதன்முதலாக நடத்தப்பட்டது. இப்போது 4-வது முறையாக தூய சேவரியார் கல்லூரியில் நடைபெறுகிறது.

கல்லூரியின் பயிர்ப் பாதுகாப்பு மையம் சார்பில் 3 நாள்கள் நடைபெறும் இம் மாநாட்டின் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. மாநாட்டு ஒருங்கிணைப்புச் செயலர் கே. சகாயராஜ் வரவேற்றார். தூய சவேரியார் கல்வி நிலையங்களின் அதிபர் டேனிஸ் பொன்னையா, கல்லூரிச் செயலர் ஜே.எம். தாஸ், முதல்வர் கில்பர்ட் கமிலஸ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

அமெரிக்காவைச் சேர்ந்த உயிர்வேதிப் பொருள்கள் உற்பத்தி நிறுவன இயக்குநர் லலிதாகுமரி, மாநாட்டு மலரை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

புதுதில்லியில் உள்ள ஆற்றல் மற்றும் வள மைய இயக்குநர் அலோக் அதோல்யா, பேராசிரியர்கள் பி. செல்வராஜ், வி. ஜெயபால், ஜே. ரோனால்ட் உள்ளிட்ட பலர் பேசினர்.

மாநாட்டில் அமெரிக்கா, சீனா, ஈரான், மேற்கிந்திய தீவுகள், சவூதி அரேபியா, நைஜீரியா, பிரேசில் உள்ளிட்ட 16 நாடுளிலிருந்தும், இந்தியாவில் இருந்தும் அறிஞர்கள், வல்லுநர்கள் என 260 பேர் பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் ஆய்வுக்காக 291 கட்டுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தானியக் கிடங்கு பூச்சிகள், வனப் பகுதி பூச்சிக்கொல்லிகள், நோய்ப் பாதுகாப்பு, நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள், தாவரப் பூச்சிக்கொல்லிகள், நானோ பொருள்கள், நன்மை தரும் பூச்சிகள், ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு ஆகிய அமர்வுகளில் இக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்படுகிறது. சனிக்கிழமை மாலை மாநாட்டு நிறைவு விழா நடைபெறுகிறது. ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகத்தினர் செய்துள்ளனர்.

**விதை கிராமத் திட்ட விவசாயிகளுக்குப் பயிற்சி**

புதுக்கோட்டை அருகே கம்மங்காடு கிராமத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ், பயறு வகை சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் லெ. அண்ணாமலை,

மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படும் திட்டங்களைப் பற்றியும், இரா. பூபதிகண்ணன் விதை ஆய்வு, விதை தேர்வு, விதைநேர்த்தி, டிஏபி தெளித்தல், களை நிர்வாகம், பூச்சிநோய் நிர்வாகம் குறித்தும், அறுவடைக்குப் பின் உள்ள செய்நோ0த்தி ஆகிய தொழில்நுட்பங்களை விதை ஆய்வு அலுவலர் பாண்டி ஆகியோரும் விளக்கினர்.

பயிற்சியில் பங்கேற்ற 100 விவசாயிகளுக்கும் தொழில்நுட்பக் கையேடு வழங்கப்பட்டது.

ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் ஜெ. ரெங்கபாஷ்யம், கோ. சக்திவேல், அ. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**கோமாரி நோய் தடுப்பு: சிறப்பு கிராம சபை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 ஊராட்சிகளிலும் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை விவாதிக்கும் வகையில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கறம்பக்குடி ஒன்றியம், கருப்பட்டிபட்டி ஊராட்சி, கிருஷ்ணம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் செ. மனோகரன் பேசியது:

மாவட்டத்தில் 497 ஊராட்சிகளிலும் இன்று கோமாரி நோய் தடுப்பு சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடைபெறுகின்றன. நோய் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு புல் மற்றும் கேழ்வரகை தேன் கலந்து தர வேண்டும். சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். கோமாரி நோய் அறிகுறி உள்ள கால்நடைகளை வளர்ப்பவர்கள் மற்ற வீடுகளுக்கு செல்ல வேண்டாம்.

நோய் தாக்கிய கால்நடைகளை உடனடியாகக் கண்டறிந்து, அதை தனிமைப்படுத்த வேண்டும். கால்நடைகளை வெயிலில் கட்டிப்போட வேண்டாம். கால் குலாம்புகளில் ரத்தம் கசியும் கால்நடைகளுக்கு மஞ்சள், வேப்பிலை அரைத்து தடவவேண்டும்.

கோமாரி நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கான தீவனங்கள் வாங்கிப் பயன்படுத்தக் கூடாது. பொதுமக்கள் மருத்துவர் ஆலோசனையைக் கேட்டு மருத்துவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ஆர். பழனிசுவாமி பேசியது:

பொதுமக்கள் கோமாரி நோய் தாக்கப்பட்ட கால்நடைகளை கண்காணிப்புடன் பாதுகாத்து தொடர் சிகிச்சைகள் அளிக்க மருத்துவக் குழு, வருவாய்த் துறை மற்றும் அலுவலர்களைப் பயன்படுத்திகொள்ள வேண்டும். தங்களுடைய சுற்றுப்புறங்களை சுகாதாரத்துடன் பராமரிக்க வேண்டும். கழிவுநீர் தேங்காமலும், கொசு உற்பத்தி ஆகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக, கந்தர்வகோட்டை ஒன்றியம் ஆத்தங்கரைவிடுதி, கறம்பக்குடி ஒன்றியம் சூத்திரன்பட்டி, களபம், ஓமக்கொல்லை ஆகிய கிராமங்களில் கோமாரி நோய் அறிகுறி உள்ள கால்நடைகளுக்கு மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளிப்பதை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர் வி. மகாலிங்கம், கால்நடை மருத்துவர் சம்பத், ஒன்றியக் குழுத் தலைவர் கெங்கையம்மாள், ஊராட்சித் தலைவர் சொக்கலிங்கம், வட்டாட்சியர்கள் காமாட்சி, அ. கமலக்கண்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**"20 உழவர்கள் இணைந்து  உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்கத் திட்டம்'**

டெல்டா பகுதியைச் சேர்ந்த 20 உழவர்கள் ஒன்றிணைந்து உற்பத்தியாளர் நிறுவனம் முன் வந்துள்ளனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைப்பது தொடர்பாக அமைக்க சட்ட முன் வரைவை மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு வெளியிட்டது. கடந்த ஏப்ரல் மாதம் முழுமையான அளவில் திட்ட வரைமுறைகள், அரசு உதவி மற்றும் சட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய உற்பத்தியாளர் நிறுவனங்களை அமைப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஏறத்தாழ 80 விவசாயிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக வேந்தர் கி. வீரமணி வாழ்த்துரையாற்றினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் முதல்வர் வடிவேல், மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி சிறப்பு அலுவலர் பாலமோகன், தமிழ்நாடு வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் மேம்பாட்டு மையப் பேராசிரியர் செல்வம், தஞ்சாவூர் நபார்டு வங்கி அலுவலர் சுப்பிரமணியன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து, துணைவேந்தர் நல். ராமச்சந்திரன் முன்னிலையில் 20 விவசாயிகள் முன் வந்து தங்களுக்குள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பது தொடர்பாக கலந்து ஆலோசித்தனர்.

பின்னர், துணைவேந்தர் பேசியது: இத்தகைய நிறுவனங்கள் இந்திய நிறுவனச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால், அது சார்ந்த பணிகளைச் செய்ய தணிக்கையாளர் மகேந்திரன் மேற்கொள்வார். நிறுவனம் அமைப்பது தொடர்பாகவும், நிர்வாக ஆலோசனைகளையும் பெரியார் தொழில்நுட்ப வணிக காப்பகத்தினர் மேற்கொள்வர்.

இதுபோன்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்க விரும்புவோர் பெரியார் தொழில்நுட்ப வணிக காப்பகத் தலைமை செயல் அலுவலர் அருணாவை 04362 264520 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு, இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டுமென கோட்டூர் ஒன்றியக்குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியக்குழுக் கூட்டம் புதன்கிழமை அதன் தலைவர் வீ. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஒன்றிய ஆணையர்கள் ஆர். வெங்கடேஸ்வரன், டி. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

த. ஜகஜீவன்ராம்: கோமாரி நோய்த் தடுப்பு முகாம் பெயரளவுக்கு நடத்தப்பட்டுள்ளது. நோய்த் தாக்கி பலியான மாடுகளை கணக்கெடுப்பதில் விடுபட்டவர்களையும் சேர்க்க  வேண்டும்.

சம்பா பயிரில் மஞ்சல் நோய்த் தாக்குதல் அதிகம் உள்ளது. நோய்த் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை வேளாண் துறையினர் மேற்கொள்ள வேண்டும். (இந்தக் கோரிக்கைகளை மற்ற உறுப்பினர்களும் வழி மொழிந்தனர்.)

அ. சுப்பிரமணியம்: ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

வ. தனபால்: ஒன்றியத்துக்குள்பட்ட அனைத்து  ஊராட்சிகளிலும் பணப்பயன் தரக்கூடிய  மரக்கன்றுகளை நடுவதன் மூலம் இயற்கை மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதுடன் ஊராட்சியின் வருமானமும் கணிசமாக உயரும்.

வீ. பாஸ்கர்: தென்பரை, பாலையூர் ஊராட்சிப்  பகுதியில் 7 மாடுகள் இறந்துள்ளன. கால்நடை  மருத்துவர்கள் வரவில்லை. நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படவில்லை. ஆர். பாண்டியன்: இறந்த கால்நடைகளுக்கு  இழப்பீடு உண்டா என்பதையும், பலியான  கால்நடைகளின் உண்மையான எண்ணிக்கையையும் சம்பந்தப்பட்ட துறையினர் வெளியிட வேண்டும்.

துணைத் தலைவர் பி. தங்கையன்: நோய்த் தாக்கி கால்நடை பலியாவதற்கும், விவசாயப் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாவதற்கும் கால்நடை, வேளாண்மைத் துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததுதான் காரணம்.

தலைவர்: திருவாரூர் மாவட்டத்தில் கோட்டூர் ஒன்றியத்தில்தான் கோமாரி நோய்த் தாக்குதல் குறைவாக உள்ளது. ஒன்றியத்தில் உள்ள 4 கால்நடை

மருத்துவமனைகளின் மருத்துவர்கள், 47 ஊராட்சிகளுக்கும் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். மேலும், அனைத்து ஊராட்சிகளுக்கும் தேவையான அளவு நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படுள்ளன. தென்பரை, பாலையூரில் இறந்த மாடுகள் பற்றி உரிய தகவல் வரவில்லை.

நேரடி நடவு முறையில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா பயிரில் மட்டும் நோய்த் தாக்குதல் உள்ளது. இதற்குக் காரணம் பருவ மழை பொய்துபோனதும், தண்ணீர்ப் பற்றாக்குறையும் தான் என வேளாண்மைத் துறையினர் தெரிவிக்கின்றனர் என்றார்.

கூட்டத்தில் வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை துறையைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

**சம்பா நெல் பயிரில்**

சம்பா நெல் பயிரில் மேற்கொள்ள வேண்டிய நோய்த் தடுப்பு மேலாண்மை வழிமுறைகளை சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

இதுகுறித்து சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கு. சசிகலா, நோயியல் துறை உதவிப் பேராசிரியர் மு. கார்த்திகேயன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் தி. இளையபாரதி ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெல் பயிரில் தற்போதுள்ள வானிலையால் நெல் பயிரில் நோய்த் தாக்குதல் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

நெல் பயிரின் இலைகள் மேல் சிறிய பழுப்பு நிற புள்ளிகள் உண்டாகி, புள்ளிகள் பெரிதாகும் போது இரண்டு பக்கங்களிலும் விரிவடைந்து கண் வடிவத்தைப் பெறுவது, இதன் ஓரங்கள் பழுப்பு நிறமாகவும், உட்பகுதி சாம்பல் நிறமாகவும் காணப்படுவது குலைநோய்த் தாக்குதலின் அறிகுறிகள்.

இந்நோய் கிருமிகள் காற்றின் மூலமாகவும், விதை மற்றும் நோயுற்ற வைக்கோல் மூலமாகவும் பரவும் தன்மையுடையது. நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் தழைச்சத்து இடுவதை தவிர்ப்பது நல்லது.

ஓர் ஏக்கருக்கு 200 மி.லி கிட்டாசின் அல்லது 200 கிராம் கார்பெண்டாசிம் அல்லது டிரைசைக்ளோசோல் 200 கிராம் அல்லது அமிஸ்டர் 200 மி.லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஃபஸ 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலையுறை அழுகல் நோய்: இலையுறை அழுகல் நோய் தாக்குதலால் நெல் கதிர் மூடியிருக்கும் இலையுறையில் முட்டை வடிவ அல்லது ஒழுங்கற்ற புள்ளிகள் உண்டாகும். இப்புள்ளிகள் நடுவில் சாம்பல் நிறத்திலும், ஓரத்தில் பழுப்பு நிறத்திலும் காணப்படும். இதனால், இளம் கதிர்கள் இலையுறையை விட்டு வெளியே வராமலிருக்கும் அல்லது சிறிதளவு மட்டும் வெளிவரும்.

இத்தாக்குதல் கண்டறியப்பட்டவுடன், ஏக்கருக்கு 200 கிராம் கார்பெண்டாசிம் அல்லது 400 கிராம் மான்கோசெப் அல்லது 200 மி.லி ஹெக்சகோனோசோல் தெளிக்கலாம்.

பாக்டீரியா இலைக் கருகல் நோய்: தற்போது மழைக்குப் பின் அனைத்து பகுதிகளிலும் இந்நோய் பரவலாகக் காணப்படுகிறது.

நோய் தாக்கிய பயிரில், இலையில் நீண்ட கோடுகளாக அலை போன்ற ஓரங்களுடன் கூடிய வைக்கோல் நிறம் இலைகளின் நுனியிலும், ஓரங்களிலும் பரவ ஆரம்பிக்கிறது.

நோய்த் தாக்குதல் கடுமையாகும் போது இலையோரங்களில் காய ஆரம்பித்து இலைமுழுவதும் பரவும்.

நெல்லில் பாக்டீரியா நோய்த் தாக்குதல் காணப்பட்டதும், தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும்.

நோயின் ஆரம்ப நிலையில் 20% பசுஞ்சாண கரைசல் தெளிக்கலாம். ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும்

ஊறவைத்து, தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து தெளிக்க வேண்டும்.

ஏக்கருக்கு 500 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடு அல்லது ஸ்ட்ரப்டோமைசின் மற்றும் 120 கிராம் டெட்ராசைக்ளின் கலவை மற்றும் 500

கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு தெளித்து பாக்டீரியா நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

**கோமாரி நோய்: இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்**

கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) இரா. கனகசபை, துணை இயக்குநர் ஆல்பிரட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பேசியது:

திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு. வரதராசன்:

மாவட்டத்தில் தூர்வாரப்படாமல் உள்ள 73 ஏரிகளையும், நீர்வரத்து வாய்க்கால்களையும் ஆழப்படுத்த வேண்டும். மலையாளப்பட்டியில் உள்ள தடுப்பணையில் மதகுகள் அமைக்க வேண்டும். லாபத்தில் இயங்கி வரும் தொடக்க கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களின் பங்கு தொகைக்கு ஏற்ப, லாபத்தை பங்கிட்டு வழங்க வேண்டும். தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன்:

கடந்த 40 ஆண்டுகளாக சின்னமுட்லு அணையை கட்ட வேண்டுமென கோரிக்கை விடப்பட்டு வருகிறது. ஆனால், அந்த திட்டத்தை தொடங்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இத்திட்டத்தை செயல்படுத்தினால்,

வேப்பந்தட்டை ஒன்றியத்தில் உள்ள 30 கிராம ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளும், பொதுமக்களும் பயன்பெறுவார்கள்.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம்:

பெரம்பலூர் மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு, ஏராளமான கால்நடைகள் உயிரிழந்து வருகிறது. இந்நிலையில், நோய் பாதிக்கப்படும் கால்நடைகள் குறித்து சம்பந்தப்பட்ட மருத்துவர்களுக்கு தகவல் அளித்தால், அதுதொடர்பான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. அதேபோல, உயிரிழக்கும் கால்நடைகள் குறித்த தகவலும் மாவட்ட நிர்வாகத்திற்கு முறையாக தெரிவிப்பதில்லை. எனவே, நோய் பாதிப்புக்குள்ளாகி உயிரிழக்கும் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு, ஒரு கால்நடைக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். பருத்தியில் வேர் அழுகல் நோய், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்காச்சோள பயிர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலர் பி. ரமேஷ் பேசியது:

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, பருத்தி மற்றும் மக்காசோள பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

இதேபோல, கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பல்வேறு பிரச்னைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென வலியுறுத்தினர்.

**திருவாரூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் புதிய நடைமுறையை கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மத்திய அரசின் போக்கை கண்டித்து, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்தில் பங்கேற்க வந்த விவசாயிகள், கூட்ட அரங்கில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் புதிய நடைமுறையை கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மத்திய அரசைக் கண்டித்தும், கடந்த ஆண்டுக்குரிய பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்றும், கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, குறைதீர் கூட்டத்தை புறக்கணிக்க முடிவு செய்தனர். அதன்படி, கூட்ட அரங்கிலிருந்து முற்பகல் 11 மணியளவில் வெளியேறிய விவசாயிகள் ஆட்சியர் அலுவலகம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருத்துறைப்பூண்டி பகுதியில் வியாழக்கிழமை பள்ளிக் குழந்தைகள் சென்ற வேன் விபத்துக்குள்ளான நிகழ்வை பார்க்கச் சென்றுவிட்டு, முற்பகல் 11.45 மணியளவில் மாவட்ட ஆட்சியரகத்துக்கு வந்த ஆட்சியர் சி. நடராசன், குறைதீர் கூட்டத்தை புறக்கணித்த விவசாயிகளை கூட்டத்துக்கு வருமாறு அழைத்தார். அதற்கு விவசாயிகள், மேற்குறிப்பிட்ட கோரிக்கையை வலியுறுத்தி கூட்டத்தை புறக்கணிப்பு செய்துவிட்டோம் என்று கூறி கலைந்து சென்றனர்.

கூட்ட அரங்குக்குச் சென்ற ஆட்சியர், அங்கிருந்த அனைத்துத்துறை அலுவலர்களிடம் பேசுகையில், அரசுத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அனைத்து பிரச்னைகளையும் ஆட்சியரே கையில் எடுக்க வேண்டிய நிலையை உருவாக்குகிறீர்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர், வேளாண் இணை இயக்குநர் மற்றும் பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, வேளாண்துறை அலுவலர்கள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஏதேனும் செய்து கொடுத்திருப்பீர்கள். அவர்களிடம் கூறி சில விவசாயிகளையாவது அமர வைத்து கூட்டத்தைத் தொடர்ந்திருக்கலாம் என கடிந்து கொண்டார். ஆனால் ஆட்சியர் வருவதற்கு முன்பு கூட்ட அரங்கில் இருந்த எந்த அரசு அலுவலரும் விவசாயிகளிடம் பேசவில்லை.

ஆட்சியர் சி. நடராசன் கூட்ட அரங்கில் இருந்தபோது புறக்கணிப்பு செய்த விவசாயிகளில் கங்களாச்சேரியை சேர்ந்த சில விவசாயிகள், கங்களாச்சேரி பகுதியில் 700 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் 150 மீட்டர் தூரம்

வரை பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்த ஆட்சியருக்கு பாராட்டு தெரிவித்து கலைந்து சென்றனர்.

**கால்நடைகளுக்கு இழப்பீடு கோரி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கக் கோரி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் காவேரிப்பட்டணத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் சங்கர் தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்டத் தலைவர் எம்.தர்மன், மாநிலக் குழு உறுப்பினர் ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயால் உயிரிழந்த கறவை மாடுகளுக்கு ரூ.25 ஆயிரமும், ஆடுகளுக்கு ரூ.5 ஆயிரமும் இழப்பீடு வழங்க கோரி, ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்களை எழுப்பினர்.

**ஏரிகளுக்கு தண்ணீர் விடக் கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்**

போச்சம்பள்ளி வட்டத்திலுள்ள 25 ஏரிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் விடக் கோரி, தமிழக விவசாயிகள் சங்கத்தினர், கிருஷ்ணகிரியை அடுத்த வேலம்பட்டியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மத்தூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் இடது புற கால்வாயை விரிவுப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இதன்மூலம், சென்றாம்பட்டி, தட்டக்கல், நாகரசம்பட்டி, அப்புக்கொட்டாய், வெலங்காமுடி, வேருப்பள்ளி, மல்லிக்கல், கரடியூர், அமணக்கம்பட்டி, வீரமலை, தொப்படிகுப்பம், ராமபுரம், ஜிம்மாண்டியூர் உள்ளிட்ட 25 ஏரிகள் நீர் ஆதாரத்தைப் பெறுகின்றன.

தற்போது இந்தக் கால்வாயை விரிவுப்படுத்தும் பணி நிறைவடைந்த நிலையில், இந்த ஏரிகளுக்கு கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாசனத்துக்கு நீரைத் திறந்து

விடக் கோரி, தமிழக விவசாயிகள் சங்கத்தினர் வேலம்பட்டி கிராமத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்டனர்.

போராட்டத்துக்கு வட்டச் செயலாளர் டி.எம்.நடராஜன் தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர் எம்.லகுமையா, மாவட்டச் செயலாளர் எஸ்.கண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைச் செயலாளர் கே.நரசிம்மன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, மாநிலத் துணைச் செயலாளர் லலிதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உண்ணாவிரதத்தில் பங்கேற்றோர் ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விடுவதன் மூலம், விவசாயப் பணிகளை மேற்கொள்வதுடன் குடிநீர் பிரச்னையையும் தீர்க்கலாம் என வலியுறுத்தினர்.

**"கெயில் திட்டம்: விளை நிலங்கள் பாதிக்கப்பட்டால் எதிர்ப்போம்'**

கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாய்களைப் பதிப்பதால் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று அத்துறையின் இணைஅமைச்சர் ஜெயந்தி நடராஜன் கூறினார்.

கேரளத்தில் இருந்து கர்நாடகத்துக்கு தமிழகத்தின் வழியாக எரிவாயு கொண்டு செல்லும் கெய்ல் நிறுவனத் திட்டத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இந்தத் திட்டத்தால் பாதிக்கப்படுவதாகக் கூறி விவசாயிகள் தொடர்ந்த மனு தள்ளுபடியானது. முன்னதாக விவசாயிகளுக்குச் சாதகமாக தமிழக அரசு பிறப்பித்த தடை உத்தரவும் ரத்து செய்யப்பட்டது.

இத்திட்டத்துக்கு அனுமதி வழங்கி நீதிமன்றம் பிறப்பித்த  உத்தரவை வரவேற்ற மத்திய அமைச்சர் நாராயணசாமி, பல லட்சம் பேர் பயன் பெறும் திட்டங்களை செயல்படுத்தும்போது சில பாதிப்புகள் வரத்தான் செய்யும் என்றார்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய மத்திய சுற்றுச்சூழல் இணை அமைச்சர் ஜெயந்தி நடராஜன், கெய்ல் திட்டத்தின்கீழ் எரிவாயுக் குழாய்களை பதிக்கும்போது விளை நிலங்கள் பாதிக்கப்பட்டால் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்றார்.

**பசு, கன்று இறந்ததால் மாட்டு உரிமையாளர்கள் அச்சம்**

போளூரை அடுத்த மாம்பட்டு ஊராட்சியில் உள்ள விவசாயி ஒருவரின் பசு கோமாரி நோய் தாக்கி வியாழக்கிழமை இறந்தது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பரவலாக ஆங்காங்கே கோமாரி நோய் தாக்கிவருகிறது. அண்மையில் துரிஞ்சாபுரம், கலசப்பாக்கம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி மாடுகள், ஆடுகள் இறந்தன. இதனால் மாவட்டத்தில் கால்நடை சந்தைக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும் கிராமங்கள் தோறும் கால்நடைகளுக்கு தடுப்பூசி மருத்துவ முகாம் நடைபெற்றது.

இருந்தபோதிலும் ஆங்காங்கே கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் இறந்து வருகின்றன. இதேபோன்று போளூரை அடுத்த மாம்பட்டு ஊராட்சியில் உள்ள கொசத்தெருவில் வசிக்கும் குப்புசாமி என்ற விவசாயியுடைய பசு கடந்த 3 மாதத்துக்கு முன்பு கன்று ஈன்றுள்ளது. இந்த பசுவுக்கு கடந்த 2 நாள்களாக பால்காம்பு வெடித்தும், வாயில் நுரைதள்ளியும் காணப்பட்டதால் குப்புசாமி கால்நடை மருத்துவரை அழைத்து வந்து பசுவுக்கு சிகிச்சை அளித்துள்ளார்.

பால் குடிக்கும் கன்றுக்கு கோமாரி நோய் தாக்கி 2 நாள்களுக்கு முன் இறந்துள்ளது. குப்புசாமி புதன்கிழமை காலை பசுவிடம் பால்கறக்க முற்பட்டபோது பால்காம்பு வெடித்து புண் ஏற்பட்டுள்ளது. மேலும் பசுவின் வாயில் நுரைதள்ளி உணவு எடுக்காமல் இருந்ததால் தனியார் கால்நடை மருத்துவரை அழைத்து வந்து சிகிச்சை அளித்துள்ளார். சிகிச்சை பலனின்றி பசு வியாழக்கிழமை இறந்தது.

குப்புசாமியின் பசு இறந்ததையடுத்து பால் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் திருவண்ணாமலை (பால்பண்ணை) ஆவின் கால்நடை மருத்துவர் செல்லப்பன் வந்து மாம்பட்டில் நோயினால் பாதிப்படைந்த 15 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுள்ளார். குப்புசாமியின் பசு இறந்த தகவல் தெரிந்த அத்திமூர் அரசு கால்நடை (பொறுப்பு) மருத்துவர் ராமன், குப்புசாமியின் பசுவை அறுத்து இருதயம், நுரையீரல் மாதிரிகளை எடுத்துச் சென்றார்.

மாம்பட்டு, எழுவாம்பாடி,ஜடதாரிகுப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் அதிகமாக தாக்கியுள்ளது. இது சம்பந்தமாக கால்நடைகளுக்கு மருத்துவர்கள் தடுப்பூசி முகாம் அமைக்கவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மாம்பட்டில் கோமாரி நோய் தாக்கி பசு இறந்ததால் விவசாயிகளிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது.

**புருட்டோனியா புழுத் தாக்குதலால் விவசாயம் பாதிப்பு**

பல்லடம் அருகே உள்ள விவசாய பயிர்களில் புருட்டோனியா புழுத் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்லடம் அருகேயுள்ள வாவிபாளையம் ஊராட்சிப் பகுதியில் அதிகளவில் காய்கறி மற்றும் மானாவாரி சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது அப்பகுதியில் மக்காச்சோளம், வெங்காயம் உள்ளிட்டவை பயிரிடப்பட்டுள்ளது. அப்பயிர்களை புருட்டோனியா என்னும் புழு தாக்கி பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இப்புழுவை கட்டுப்படுத்த தமிழக அரசு உரிய மருந்தை அறிமுகப்படுத்தி, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அல்லது வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலமாக வழங்க வேண்டும் என்று வாவிபாளையம் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் வி.அனந்தகிருஷ்ணன் வேளாண்மை துறையினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**ரூ.16 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை ரூ.16 லட்சத்து 46 ஆயிரத்து 820-க்கு கொப்பரை தேங்காய் விற்பனை செய்யப்பட்டது.

வாரந்தோறும் நடைபெற்று வரும் ஏல முறையில், இந்த வார ஏலத்துக்கு மொத்தம் 540 மூட்டைகளில் 25 ஆயிரத்து 373 கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில், மேல் விலையாக கிலோ ரூ.75.15, குறைந்த பட்சமாக ரூ.50.10 என விற்பனையானது. கடந்த வாரத்தை விட விலை கிலோவுக்கு ரூ.1.25

குறைந்திருந்தது.  வெளி மாநில விற்பனையில் நீடிக்கும் மந்த நிலை காரணமாக விலை சரிந்துள்ளதாக கூறப்படுகிறது.

**நோய் தாக்கிய கோழிகளை வாய்க்கால் பகுதியில் விட்டுச் செல்லும் பண்ணையாளர்கள்**

கோபி பகுதியில் நோய் தாக்கிய கோழிகளை பண்ணையாளர்கள் அங்குள்ள வாய்க்கால் பகுதியில் கொண்டுவந்து போட்டு விட்டுச் செல்வது அதிகரித்துள்ளது.

கோபி பகுதியில், கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் உயிரிழந்து வரும் நிலையில், மர்மநோய் தாக்குதலால், கறிக்கோழிகளும் இறந்து வருவகின்றன. இந்த மர்ம நோய் கோபி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கறிக்கோழி வளர்ப்பு பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிக்குஞ்சுகளைத் தாக்கியுள்ளது. இதனால் நோய் தாக்குதலுக்குள்ளான 30 நாள் முதல் 40 நாட்களான, 2,000-க்கும் மேற்பட்ட கோழிக்குஞ்சுகளை, பண்ணையாளர்கள் அப்பகுதியில் உள்ள எல்.பி.பி., வாய்க்காலின் ஓரத்தில் புதன்கிழமை விட்டுச் சென்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த கடுக்கம்பாளையம், கொளப்பலூர் கால்நடை பராமரிப்புத் துறை டாக்டர் குழந்தைவேலு, கவுதம் ஆகியோர் நோய் பாதித்த நிலையில், அனாதையாக தெருவில் விடப்பட்ட கோழிக்குஞ்சுகளை பார்வையிட்டனர்.

மேலும், கொளப்பலூர் பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் துப்புரவுத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு, அங்கு விடப்பட்டுச் சென்ற கோழிக்குஞ்சுகளை பிடித்து, குப்பை லாரியில் ஏற்றிச் சென்றனர்.

அந்த கோழிக்குஞ்சுகளின் ரத்த மாதிரி பரிசோதனைக்கு பின்பே, அவற்றிற்கு என்ன நோய் தாக்கியுள்ளது என்ற விவரம் தெரியவரும் என கால்நடை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரி கோபியில் விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

கோபி பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் கே.ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தமிழகத்தில் பரவி வரும் கோமாரி நோய், ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டம், அரியப்பம்பாளையம், சாணார்பாளையம், புங்கம்பள்ளி, காவிலிபாளையம் பகுதிகளிலும், கோபி வட்டம், கலிங்கியம், சின்னக்குளம், செம்மாண்டாம்பாளையம் பகுதிகளிலும், பவானி வட்டம், பெரியபுலியூர், வளையக்காரன்பாளையம், பூலப்பாளையம் பகுதிகளிலும், பெருந்துறை வட்டம், தயிர்பாளையம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முழுவதும் பரவியுள்ளது. இப்பகுதிகளில் கோமாரி நோய்த் தாக்குதல் காரணமாக நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் பரவிவரும் கோமாரி நோயை தடுக்க, போர்க்கால அடிப்படையில் நடமாடும் மருத்துவக் குழு அமைத்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த

வேண்டும்.

கர்நாடக மாநிலத்தில் கோமாரி நோயால் இறந்த கறவை மாடுகளுக்கு தலா ரூ.25 ஆயிரமும், சினை மாடுகளுக்கு ரூ.20 ஆயிரமும் மற்ற மாடுகளுக்கு ரூ.15 ஆயிரமும் என இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழக பேரிடர் நிவாரணத் தொகையிலிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து கர்நாடகத்தைப் போல் மாடுகளுக்கும், இறந்து போன ஆடுகளுக்குத் தலா ரூ.5000 வீதமும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கோபி சார் ஆட்சியரிடம் நிவாரணம் கோரி மனு அளிக்கப்பட்டது.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 67.85 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 67.85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,243 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீரும், வாய்க்காலில் 900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 10.08 டி.எம்.சி. ஆகும்.

**நெற்பயிரில் நுண்ணுயிர் தெளிப்பு மேலூரில் இன்று செயல்விளக்கம்**

நீரின்றி கருகிவரும் நெற்பயிரை காப்பாற்ற, மெத்திலோ பேக்டீரியம் தெளிப்பு செயல்விளக்கம் மேலூர்-மதுரை சாலையில் விநாயகபுரத்திலுள்ள நீர்மேலாண்மை பயிற்சி நிலையத்தில் வெள்ளிக்கிழமை(நவ.29) காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேலூர் ஒருபோக சாகுபடிப்பகுதிக்கு பெரியாறு-வைகை அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பது கடந்த வாரம் நிறுத்தப்பட்டுள்ளது. நீரின்றி நெற்பயிர் கருகுவதை தவிர்க்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மெத்திலோ பேக்டீரியம் நுண்ணுயிரியை கண்டுபிடித்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 20 மில்லி இந்த நுண்ணுயிரியை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். இதனால் தற்போது கதிர்பிடிக்கும் தருணத்திலுள்ள நெற்பயிரை மேலும் 15 நாட்கள்வரை நீரின்றி பசுமையுடன் கருகாமல் பாதுகாக்கமுடியும் என்கின்றனர் வேளாண்மைத்துறையினர். மதுரை வேளாண் அறிவியல்மையம், மதுரை வேளாண்மைத்துறையினர் இணைந்து மேலூர் விநாயகபுரம் நீர்மேலாண்மை நிலையத்தில் இந்த செயல்விளக்கத்தை காலை 10 மணியளவில் நடத்துகின்றனர். விவசாயிகள் இதை நேரில் பார்வையிட்டு பலனடையலாம் என வேளாண் உதவி இயக்குநர் எம்.சரவணன் தெரிவித்துள்ளார்.

பெண் போலீஸ் தற்கொலை வழக்கு

சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றம்

**விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருள்கள்**

நத்தம் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகளுக்குத் தேவையான ஏ.டி.டி.45 என்ற ரக நெல் விதை கையிருப்பில் உள்ளது. மேலும், இதற்குப் பயன்படுத்தும் உயிர் உரம், நுன்னுரம், களைக்கொல்லி, பயிர் சத்துகளை அறிந்திட இலை வண்ண அட்டை மற்றும் நீல பச்சைப்பாசி ஆகிய இடு பொருள்கள் மானியத் திட்டத்தில், அதற்கான விலையில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளாலாம்.

சம்பந்தப்பட்ட விவசாயிகள், அதற்கான ஆவணங்களுடன் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு, நத்தம் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் ரவிபாரதி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

**ஏலக்காய் மறுநடவு மானியம் பெற விண்ணப்பிக்கலாம்**

ஏலக்காய் மறுநடவு செய்வதற்கு மானியம் பெற விண்ணப்பிக்கலாம், என ஸ்பைசஸ் போர்டு துணை இயக்குநர் அறிவித்துள்ளார்.

இது குறித்து, கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், நெடுங்கண்டத்தில் உள்ள ஸ்பைசஸ் போர்டு துணை இயக்குநர் (அபிவிருத்தி) பி.கே. சுரேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளது:

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் கேரள விவசாயிகளும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும் ஏலத் தோட்டங்களை வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது, இப்பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது. இந்த ஆண்டு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், ஏலக்காயில் மறுநடவுக்கு ஏற்ற காலமாக இது கருதப்படுகிறது.

ஏலக்காய் மறுநடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ஸ்பைசஸ் போர்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 11 ஆயிரம் வரை மானியம் வழங்குகிறது. இவற்றைப் பயன்படுத்தி, ஏலக்காய் விவசாயிகள் ஏலக்காய் மறுநடவு செய்யலாம்.

மறுநடவு செய்யும் விவசாயிகள் ஸ்பைசஸ் போர்டின் மானியம் பெற, ஸ்பைசஸ் போர்டின் களஅலுவலர்களையோ அல்லது அருகில் உள்ள ஸ்பைசஸ் போர்டு

அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை வழங்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**கோமாரி நோய் எதிரொலிஆட்டுச்சந்தைக்கு வந்த வியாபாரிகளுக்கு அனுமதி மறுப்பு**

கோமாரி நோய் எதிரொலியாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வியாழக்கிழமை கூடிய சந்தைக்கு ஆடுகளுடன் வந்த வியாபாரிகளை பேரூராட்சி நிர்வாக ஊழியர்கள் அனுமதிக்க மறுத்து விட்டனர்.

மானாமதுரை பகுதியில் கோமாரி எனும் காணை நோய் தாக்கி ஏராளமான ஆடு, மாடுகள் இறந்து வருகின்றன. இந் நிலையில் மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி மானாமதுரை நகரில் மறு அறிவிப்பு வரும் வரை ஆட்டுச்சந்தை நடைபெறாது எனவும் வியாபாரிகள் ஆடுகளை சந்தைக்கு விற்பனைக்கு கொண்டுவரக்கூடாது என்றும் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் மானாமதுரையில் வழக்கமாக கூடிய வாரச்சந்தையின்போது காலையில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த சில ஆட்டு வியாபாரிகள் வேன்களில் ஆடுகளை ஏற்றி பேரூராட்சி நிர்வாக அலுவலகம் அருகேயுள்ள ஆடு விற்பனை செய்யப்படும் இடத்துக்கு கொண்டு வந்து இறக்கினர்.

அப்போது அங்கு வந்த பேரூராட்சி சுகாதார ஆய்வாளர் அபுபக்கர், சுகாதார மேற்பார்வையாளர் பாலு மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் ஆட்டுச்சந்தைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி ஆட்டு அனுமதிக்கவில்லை.

இதையடுத்து இவர்கள் ஆடுகளுடன் வைகையாற்றுப் பகுதிக்கு கொண்டு சென்று ஆடுகளை விற்பனை செய்தனர். தடை அறிவிப்பு காரணமாக ஆட்டுச்சந்தைக்கு ஆடுகளை விற்பனை செய்ய ஒரு சில வியாபாரிகள் மட்டும் வந்திருந்தனர். மேலும் ஆட்டுச்சந்தை நடைபெறும் இடத்தில் ஆடுகளை ஏற்றி வரும் வாகனங்கள் உள்ள நுழைய முடியாதபடி பேரூராட்சி நிர்வாகத்தினர் டிராக்டர்களை குறுக்கே நிறுத்தி வைத்தும் கயிறு கட்டியும் தடை ஏற்படுத்தியிருந்தனர்.

**பயனாளிகளுக்கு கடன்,  மானியத் திட்டங்களை வங்கிகள் தாமதம் இல்லாமல் வழங்க வேண்டும்**

கடன் உள்ளிட்ட அரசின் பல்வேறு மானியத் திட்டங்களை வங்கிகள் தாமதம் இல்லாமல் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆட்சியர் டி.என். ஹரிஹரன் பேசியதாவது: மத்திய, மாநில அரசுகளின் மானிய திட்டங்களை பயனாளிகளிடம் கொண்டு சேர்ப்பதில் வங்கிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

அரசு அறிவித்துள்ளபடி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டு, அதன் மூலம் கூலி விடுவிக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் விவசாயிகள், நெசவாளர்கள், மாணவர்கள், தாட்கோ மற்றும் மாவட்ட தொழில் மையம் மூலம் தொழில் முனைவோருக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அவர்களுக்கான கடன், மானியத் திட்டங்கள் காலதாமதமின்றி சென்றவடைய வங்கியாளர்கள், அரசு நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

அதன் அடிப்படையில் நிலுவையில் உள்ள தொழில் கடன் தொடர்பான விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அரசின் கடனுதவி திட்டங்களை உடனடியாக செயல்படுத்த வேண்டும். அதேபோல் ஒவ்வொரு வங்கிக்கும் வழங்கப்பட்ட குறியீட்டு இலக்கையும் அடைய வேண்டும்.

விவசாய கடன் வழங்கும்போது, கட்டாயம் பயிர் காப்பீடு செய்வது அவசியமாகும். விவசாயிகளுக்கு தாமதம்இன்றி பயிர் கடன் அளிக்கவும் வேண்டும் என ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் திருஞானசம்பந்தம், நபார்டு வங்கியின் பொதுமேலாளர் சுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) முருகதாஸ், புதுவாழ்வு திட்ட மேலாளர் சண்முகராஜ், மகளிர் திட்ட அலுவலர் பிச்சை, முன்னோடி வங்கியின் மேலாளர் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


**"கெயில் திட்டம்: விளை நிலங்கள் பாதித்தால் எதிர்ப்போம்'**

கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாய்களைப் பதிப்பதில் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று அத்துறையின் இணைஅமைச்சர் ஜெயந்தி நடராஜன் கூறினார்.

கேரளத்தில் இருந்து கர்நாடகத்துக்கு தமிழகத்தின் வழியாக எரிவாயு கொண்டு செல்லும் கெய்ல் நிறுவனத் திட்டத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. முன்னதாக விவசாயிகளுக்குச் சாதகமாக தமிழக அரசு பிறப்பித்த தடை உத்தரவும் ரத்து செய்யப்பட்டது. இத்திட்டத்துக்கு அனுமதி வழங்கி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை வரவேற்ற மத்திய அமைச்சர் நாராயணசாமி, பல லட்சம் பேர் பயன் பெறும் திட்டங்களை செயல்படுத்தும்போது சில பாதிப்புகள் வரத்தான் செய்யும் என்றார்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய மத்திய சுற்றுச்சூழல் இணை அமைச்சர் ஜெயந்தி நடராஜன், கெய்ல் திட்டத்தின்கீழ் எரிவாயுக் குழாய்களை பதிக்கும்போது விளை நிலங்கள் பாதிக்கப்பட்டால் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்றார்.

**வலுவிழந்தது "லெஹர்' புயல்**




வங்காள விரிகுடாவின் மேற்கு மத்தியப் பகுதியில் மையம் கொண்டிருந்த "லெஹர்' புயல் வலுவிழந்தது. ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் அருகே இந்தப் புயல் 120 கி.மீ. வேகத்தில் வடகிழக்கு திசையை நோக்கி கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது, ஆந்திரம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் ஏனாம் மாவட்டம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெலங்கானா பகுதியில் பலத்த காற்றுடன் அடுத்த 36 மணி நேரத்தில் மழை பெய்யும். ஆந்திரத்தில் அப்போது 45-45 கி.மீ. முதல் 65 கி.மீ வேகத்தில் புயல் வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் நெருங்கி வருவதையொட்டி, 27,000 பேர் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மீட்புக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒடிஸாவில் உலக வங்கிக் குழு ஆய்வு: இதனிடையே, ஒடிஸாவில் பாய்லின் புயலால் பாதிக்கப்பட்ட கஞ்சாம் மாவட்டப் பகுதிகளை உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி வளர்ச்சிக் குழுவினர் புதன்கிழமை ஆய்வு நடத்தினர். 14 பேர் கொண்ட குழுவினர் கஞ்சாம், சாத்ரபூர், ரங்கீலுண்டா மற்றும் கடற்கரை கிராமப் பகுதிகளுக்கு சென்று சேத விவரங்களைச் சேகரித்தனர்.

பின்னர் உலக வங்கி அதிகாரிகள் கூறுகையில், ""ஒடிஸா அரசு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக ரூ.2,200 கோடி கேட்டுள்ளது. இது குறித்து முதல்வர் நவீன் பட்நாயக் மற்றும் வங்கிப் பிரதிநிதிகள், சர்வதேச நிதி அமைப்பினருடன் புவனேசுவரத்தில் ஆலோசனை நடத்தினர். இதையொட்டி இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது" என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.11.2013**

## ஏலத்தோட்ட விற்பனை பரிவர்த்தனைகள் குறைவு கஸ்தூரி ரங்கன் அறிக்கை : விளைவு

கம்பம் கஸ்தூரிரங்கன் அறிக்கை எதிரொலியாக :, கேரளாவில் பத்திரப்பதிவு அலுவலகங்களில், ஏலத்தோட்ட விற்பனை தொடர்பான பதிவுகள் சரிவை சந்தித்துள்ளது. இந்தியாவில் ஏலக்காய் சாகுபடியில், கேரளா முதலிடம் பெறுகிறதுஇடுக்கி . மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கரில், ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில், மூன்று தாலுகாக்களை கார்டமம் ரிசர்வ்''' என்று கஸ்தூரி ரங்கன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுகஸ்தூரிரங்கன் . அறிக்கையால், ஏல விவசாயிகள் கடுமையான பாதிப்பிற்கு ஆளாக நேரிடும், என ஏல விவசாயிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர்இடுக்கி மாவட்டத்தில் வண்டன்மேடு ., புளியன்மலை, இஞ்சிப்பிடிப்பு, கருவாக்குளம், மாதவன்கானல், சாஸ்தான்ஓடை, சங்குண்டான் உள்ளிட்ட சில பகுதிகளில் முதல்தர ஏலத்தோட்டங்கள் உள்ளனசில . ஆண்டுகளாக ஏலத்தோட்டங்களின் விலை உச்சத்திற்கு சென்றது .ஏக்கர் ரூ .15 லட்சம் முதல் 25 லட்சம் வரை விலை போனதுஇப்போதும் ., உச்சத்தில் இருந்து இறங்கவில்லைசமீபத்தில் கஸ்தூரிரங்கன் அறிக்கை பற் .றிய தகவல்கள் வெளியானதால், ஏலத்தோட்டங்கள் விற்பனை குறைந்து விட்டதுஏல . விவசாயிகள் கூறுகையில், " 6 ஏக்கருக்கு மேல் விற்பனை செய்ய முடியாது என்ற உத்தரவு வரவிருப்பதாக கூறுகின்றனர்கஸ்தூரிரங்கன் அறிக்கை . அமல்படுத்தப்பட்டால், ஏல விவசாயிகளால் விவசாயம் செய்ய முடியாத நிலை

ஏற்படும்இதனால் . ஏலத்தோட்டங்களுக்கு இருந்த கிராக்கி குறைந்து வருவது உண்மை தான்,என்றனர்.

### நெல் வயல்களுக்கு புழுதி"' சான்று வி.ஓ.ஏ.,க்கள் மீது விவசாயிகள் புகார்

ஆர்: மங்கலம்.எஸ். திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட ஆனந்தூர், சோழந்தூர், உப்பூர், ஆர்மங்க.எஸ்.லம், செங்குடி உட்பட பல பகுதிகளிலும் 40 ஆயிரம் எக்டேரில் நெல் விதைப்பு செய்துள்ளனர்பருவமழை பொய்த்து ., நெல் பயிர்கள் கருக துவங்கி உள்ளன. வயல்கள் கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாறிவருகிறதுமங்கலம்.எஸ்.ஆர் ., சோழந்தூர், உப்பூர், செங்குடி, வரவணி, கொட்டுப்புளி, சேத்திடல், ஆனந்தூர் உட்பட சுற்றுப்புற பகுதிகளில் கருகிய நெல்வயல்களை உழுது, எள் விதைப்பு செய்து வருகின்றனர்சாகுபடி .

.ஓ.ஏ.கணக்கெடுக்க செல்லும் வி,க்கள் எள் விதைத்த வயல்களை, சாகுபடி கணக்கில் புழுதிஎந்தவித சாகுபடியும் செய்யப்படாத) வயல்என குறித்து ( செல்கின்றனர்நெல் விதைத்தும் பயிர் இன்சூரன்ஸ் ., வறட்சி நிவாரணம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர்.

கொட்டுப்புளி ராமு கூறியதாவது ஏக்கருக்கு :15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து, நெல் பயிர்கள் கருகியதால், வேறு வழியின்றி லேசான ஈரப்பதத்தை பயன்படுத்தி, எள் விதைப்பு செய்து வருகிறோம்.ஓ.ஏ.வி .,க்கள், "புழுதி' என, அடங்கல் கணக்கில் குறித்து செல்கின்றனர்.ஓ.ஏ.வி .,க்களிடம் கேட்டால், கணக்கெடுப்பதற்குள், ஏன்?, எள் விதைப்பு செய்தீர்கள் என கேட்கின்றனர்எள் . விதைப்புக்கு நவம்பர் மாத பட்டமே ஏற்றது என்பதால், விதைப்பு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

விவசாயிகள் பாதிக்காத வகையில், நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல் என்றே அடங்களில் குறிப்பிட வேண்டும், என்றார்.

வரவணி வி.ஓ.ஏ., விஜயகுமாரி கூறுகையில், ""சாகுபடி கணக்கில் அக்டோபர் மாதத்தில் நெல் சாகுபடி எனவும், நவம்பரில் மாற்று பயிர் எள் உள்ளிட்ட தானிய)

வகைகள்என(, குறித்துள்ளோம்அதிகாரிகள் எதை எடுத்துக்கொள்கிறார்களோ .,
அவை கணக்கில் இடம்பெறும்," என்றார்.

வருவாய்த்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பருவமழை
ஏமாற்றத்தால்தான் விவசாயிகள் நெல் விதைப்பு செய்த வயல்களை உழுது, மாற்று
பயிர் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்இது ., இயற்கையால் ஏற்பட்ட மாற்றம்
தான்விவசாயிகள் எந்தவித மாற்றுபயிர்களுக்கு . மாறினாலும், ஆரப்பத்தில்
விதைப்பு செய்யப்பட்ட நெல் சாகுபடியே அடங்களில் ஏற்ற வேண்டும் என
அனைத்து வி.ஓ.ஏ.,க்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்," என்றார்.

## கோபி பகுதியில் கோழிகளுக்கு பரவும்.பி.பி.மயானமாகும் எல் !மர்மநோய்..., வாய்க்கால்

கோபிசெட்டிபாளையம்கோபி பகுதியில் கோமாரி நோய்க்கு கால்நடைகள் :
பலியாகி வரும் நிலையில், மர்மநோய் தாக்குதலால், கறிக்கோழிகளும் இறந்து
வருவதால், பண்ணையாளர்கள் பீதியில் உள்ளனர்நோய் தாக்கிய கோழிகளை .,
பண்ணையாளர்கள் எல்.பி.பி., வாய்க்கால் அருகே அனாதையாக விட்டு
செல்கின்றனர்.

கோபி சுற்று வட்டார பகுதியில் கால்நடைகள் வளர்ப்போரின் எண்ணிக்கை
அதிகளவில் உள்ளதுபனிக்காலத்தில் பசு ., எருமைக்கு கோமாரி நோயும்,
ஆடுகளுக்கு துள்ளுமாரி, ஆட்டுக்கொல்லி நோய் ஏற்படுகிறதுகோபி சுற்று .
வட்டாரத்தில் நம்பியூர், கோபி, அய்யம்புதூர், கவுந்தபாடி உள்ளிட்ட இடங்களில்
நூற்றுக்கணக்கான கால்நடைகள் கோமாரி நோயால் இறந்துள்ளது.

கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வு முகாம், தடுப்பு நடவடிக்கைகளை,
கால்நடைத்துறையினர் சார்பில் மேற்கொள்ளப்பட்டாலும், அந்நோய்க்கு நாட்டு
மருந்துகளை உபயோகிப்பதால், பெரும்பாலான கால்நடைகள் இறக்கிறது .
கோமாரி நோயின் தாக்குதலால், விவசாயிகள் பலரும் பீதியில் இருந்தனர் .
இந்நிலையில், கோபி சுற்றுவட்டார பகுதியில், கறிக்கோழிகளுக்கு மர்மநோய்
தாக்கி வருவதால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளது.

கோபி சுற்று வட்டாரத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் அமைந்துள்ளன. பண்ணைகள் மூலம் கறிக்கோழி மற்றும் முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது .30 நாள் முதல், 40 நாட்களான கோழிக்குஞ்சுகளுக்கு மர்ம நோய் தாக்கியதால், 2,000க்கும் மேற்பட்ட கோழிகளை, எல்.பி.பி., வாய்க்காலின் ஓரத்திலேயே பண்ணையாளர்கள் விட்டு செல்கின்றனர்.

தகவல் அறிந்த கடுக்கம்பாளையம், கொளப்பலூர் கால்நடை பராமரிப்பு துறை டாக்டர் குழந்தைவேலு, கவுதம் ஆகியோர் நோய் பாதித்த நிலையில், அனாதையாக தெருவில் விடப்பட்ட கோழிக்குஞ்சுகளை பார்வையிட்டனர்.

கொளப்பலூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் துப்புரவு தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு, சுற்றி திரிந்த கோழிக்குஞ்சுகளை பிடித்து, குப்பை லாரியில் ஏற்றிச் சென்றனர்.

ஈரோடு கோழி ரத்த மாதிரி பரிசோதனைக்கு பின்பே, கோழிகளுக்கு என்ன நோய் தாக்கியுள்ளது என்ற விவரம் தெரியவரும் என, கால்நடை டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து கறிக்கோழி பண்ணையாளர்கள் கூறியதாவது:

கோபி சுற்றுவட்டார பகுதியில் உள்ள பண்ணைகளில் உள்ள கோழிகள் மர்ம நோயால் பாதிக்கப்பட்டு வருகிறதுகோழி குஞ்சுகளின் இறக .ைகள் முழுவதும் விழுந்த நிலையிலும், ஆங்காங்கே ரத்த கசிவு ஏற்பட்ட நிலையில் காணப்படுகிறது . சில கோழி குஞ்சுகள் சிறிது நேரம் சோர்வாக காணப்பட்டு, பின் சுருண்டு விழுந்து இறக்கிறதுஎனவே ., நோயால் பாதிக்கப்பட்ட, 2000க்கும் மேற்பட்ட கோழிக்குஞ்சுகளை, எல்.பி.பி., வாய்க்கால் அருகே உள்ள சாலையோரத்தில், பண்ணையாளர்கள் விட்டு செல்கின்றனர்இறந்த கோழிகளை ., எல்.பி.பி., வாய்க்காலில் வீசி செல்கின்றனர், என்றனர்.

## விதைகளின் முளைப்பு திறன் அறிய மாதிரிகள் சேகரிப்பு

ஈரோடுதரம் மற்றும் முளைப்பு திறன் அறிய வெங்காயம் :, மக்காச்சோள விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை தலைமையில், குண்டடம் பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டனபவானி ., விதை ஆய்வாளர் சிவக்குமார், தாராபுரம் விதை ஆய்வாளர் ரவி, காங்கேயம் விதை ஆய்வாளர் சாமுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விலை பட்டியல், ரசீது இல்லாமல் இருப்பு வைத்திருத்தல், விவசாயிகளிடம் கையொப்பம் பெறாமல் விற்பனை ரசீது இன்றி விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் இருந்தால், கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

வெளி மாநிலங்களில் இருந்து பெறப்பட்டு விற்பனை செய்யும் விதைகளுக்கு படிவம் 2, தேவை என்பது எடுத்துரைக்கப்பட்டது.

வெங்காய உற்பத்தி, தற்போது அதிகளவில் இருப்பதால், வெங்காயம் விதை உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன . விற்பனை செய்யும் வெங்காய விதைகள் தரமானதாக இருக்க வேண்டும், என்பதற்காக விற்பனை நிலையங்களில், விதை மாதிரிகள் எடுக்கப்பட்டன . மக்காச்சோளம் விதைகளின் தரம் அறிய விதை மாதிரிகள் எடுக்கப்பட்டன .36 விதை மாதிரிகள், ஈரோடு விதை பரிசோதனை நிலையத்துக்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

குண்டடம் பகுதியில், வெங்காயம் விதை உற்பத்தி செய்யும் கே.பி.எம்., விதை நிறுவனத்தில் வெங்காய விதை உற்பத்தி செய்யும் முறை ஆய்வு செய்யப்பட்டது. வயல் மட்ட அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்லும் விதைகள், ஆய்வு செய்யப்பட்டனவெங்காய நாற்று உற்பத்தி செய்து விற்பனை . செய்வதற்கும், உரிய ரசீது விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும், என்று அறிவுறுத்தப்பட்டதுதரமான விதை ., தரமான வெங்காய நாற்றுகளை வினியோகம் செய்ய வேண்டும், என்று அறிவுறுத்தப்பட்டது.

## குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் நெல் விதையால் பலன் பயிரிட : விவசாயிகளுக்கு அறிவுரை

கூடலூர் கூடலூர் பகுதி நெல் விவசாயிகள் :, குறைந்த செலவில் அதிகம் மகசூல் பெற,"கோ.ஆர்., 50' ரக நெல்லை பயிரிட வீரிய ஒட்டுநெல் ஆராய்ச்சி மையம் அறிவுறுத்தி உள்ளதுகோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் . சார்பில், புதிதாக அறிமுகப்படுத்த உள்ள, "கோர்.ஆர்.50' என்ற புதிய வகை நெல்விதை, ஆய்வுக்காக, கூடலூாரில் விதைக்கப்பட்டதுஇதில் ., நல்ல மகசூல் கிடைத்திருப்பதை தொடர்ந்து, மற்ற விவசாயிகளுக்கும், இதே நெல் விதையை வழங்க முடிவு செய்யப்பட்டதுகூடலூர் வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையம் . சார்பில், இதற்கான பயிற்சி முகாம், கூடலூர் பஸ் ஸ்டாண்ட் அருகே, "கோ.ஆர்., 50' நெல் பயிரிடப்பட்ட வயலில் நேற்று நடந்தது.

இதில், நெல் ஆராய்ச்சி மைய உதவி விரிவுரையாளர் தேவானந்த் பேசுகையில், ""இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட .ஆர்.கோ", 50' என்ற புதிய வகை நெல்லில், குறைந்த நாட்களில் நல்ல மகசூல் கிடைக்கிறதுஇந்த நெல்லில் . சாதாரணமாக ஒரு எக்டருக்கு 6.5 டன் கிடைக்கும் முறையாக பராமரித்தால் .8 டன் வரை கிடைக்கும் .135 நாட்களில் அதிக மகசூல் கிடைப்பதுடன், செலவு குறைவு. கூடலூர் காலநிலை நெல் உற்பத்திக்கு ஏற்றதாக இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்எனவே ., விவசாயிகள் இந்த வகை நெல்லை அதிகளவில் பயிரிட்டு முன்னேற வேண்டும்," என்றார்.

## நெல் அறுவடை பாதிக்கும் அபாயத்தால் கவலை

பந்தலூர் கூடலூர் :, பந்தலூர் பகுதியில் தொடரும் மழையால் நெல் அறுவடை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுகூடலூர் ., பந்தலூர் பகுதியில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறதுஇதில் ., கடந்த ஆகஸ்ட் மாதம் நடவு செய்யப்பட்ட நெல் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில், தற்போது அவ்வப்போது மழை பெய்து வருவதால், நெல் அறுவடை பாதிக்கப்படும் என்பதுடன்; அறுவடை செய்த நெற்கதிர்களை பாதுகாக்க இயலாத சூழ்நிலை

ஏற்படும். இது குறித்து விவசாயி நீலகண்டன் கூறுகையில்,""இப்பகுதியில் ஒரு சில இடங்களில் மட்டுமே நெல் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறதுதற்போதைய . சூழ்நிலையில், 10 நாட்களுக்கு மழை பெய்யாமல் இருந்தால் மட்டுமே நெல் அறுவடை சீரான முறையில் மேற்கொள்ள இயலும்," என்றார்.

## பனிக்கால பயிர்கள் சாகுபடி தோட்டக்கலை அதிகாரி அறிவுரை

வாலாஜாபாத்மானாவாரியில்:, பனிக்காலத்தில் காய்கறி பயிர்களை செய்து பயனடையலாம் என, தோட்டக்கலை துறை தெரிவித்துள்ளது.

மானாவாரி தரிசு நிலங்களில், பனிக்காலத்தில் விளையக்கூடிய கேரட், பீன்ஸ், கொத்தவரை ஆகிய தோட்ட காய்கறிகள் பயிரிடலாம்.

இதற்காக, நிலத்தை மேம்படுத்தி, முறையான தொழில் நுட்பத்தை பின்பற்றி, பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம்கூடுதல் விவரங்களை பெற ., வாலாஜாபாத் தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்க்கரை ஆலை நிர்வாகம் அலட்சியம் வெட்டிய கரும்பு வெயிலில் காய்கிற

வாலாஜாபாத்வெட்டிய கரும்புகளை ஆலைக்கு எடுத்து செல்ல:, சர்க்கரை ஆலை நிர்வாகம் லாரிகளை அனுப்பாததால், லோடு ஏற்ற முடியாமல், வெட்டிய கரும்பு வெயிலில் உலர்ந்து வீணாகிறது.

அறுவடை பருவம்

காஞ்சிபுரம் அடுத்த, கோவிந்தவாடி அகரம் கிராமத்தில், 20 ஹெக்டேர் பரப்பில் கரும்பு விவசாயம் செய்துள்ளனர்இதில் ., பெரும்பாலான விவசாயிகளின் கரும்பு அறுவடை பருவத்தில் உள்ளது.

சில விவசாயிகள் கரும்பு அறுவடையை துவக்கி உள்ளனர்கரும்பை வெட்டி . .சர்க்கரை ஆலை நிர்வாக லாரிகள் மூலம் கொண்டு செல்ல வேண்டும்

தற்போது, கோவிந்தவாடி அகரம் பகுதியில், அறுவடை செய்யப்பட்டு வரும் கரும்பை ஏற்றிச் செல்ல சர்க்கரை ஆலை நிர்வாகம் லாரிகளை அனுப்பவில்லை. இதனால், அறுவடை செய்த கரும்புகள் வெயிலில் காயும் நிலை ஏற்பட்டுள்ளது . இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

கால தாமதம்

இதுகுறித்து, கோவிந்தவாடி அகரம் சீனுவாசன் கூறியதாவது:

நான்கு ஏக்கர் பரப்பில், கரும்பு தோட்டம் அமைத்துள்ளேன்கரும்பு வெட்டுவதற்கு .

அனுமதி கொடுத்த ஆலை நிர்வாகம், லோடு ஏற்றிச் செல்ல லாரிகளை

அனுப்புவதில் காலம் தாழ்த்தி வருகிறது.

இதனால், வெட்டிய கரும்புகள் வெயிலில் காய்கிறதுமுதலீடு செய்த பணம் .

கிடைக்குமா? என்னும் கேள்விக்குறி

ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு, அவர் கூறினார்.

### நெல் பயிரில் மர்மநோய் விவ :சாயிகள் கலக்கம்

விழுப்புரம் விழுப்புரம் அடுத்த அகரம் கிராமத்தில் விவசாயிகள் நடவு செய்துள்ள :,

நெல் பயிரில் மர்ம நோய் தாக்கி காய்கின்றன.

மாவட்டத்தில்

தற்போது பெய்து வரும் பரவலான மழை மற்றும் போர்வெல் பாசனத்தை பயன்

படுத்தி, பல

கிராமங்களில் விவசாயிகள் நெல் நடவு செய்துள்ளனர்.

விழுப்புரம் அடுத்த அகரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன் உட்பட

சிலர், இரண்டு வாரங்களுக்கு முன் நிலங்களில் நெல் நடவு செய்தனர்.

இங்கு நடவு

செய்த பயிர்கள் பச்சை பிடித்து, செழிப்பாக வளராமல், காய்ந்து வருகிறது.

இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள் பூச்சி கொள்ளி மருந்தும் தெளித்து

வருகின்றனர்இருப்பினும் இதுவரை பயிர் துளிர் விட்டு வளராமல் ., காய்ந்த

நிலையில் காணப்படுகின்றனஆனால் இதே நாளில் நடவு செய்யப்பட்ட .,

அருகிலுள்ள வயல்களில் நெல் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

வேளாண்துறை அதிகாரிகள், விவசாயி களுக்கு உரிய வழிகாட் டுதல்கள் வழங்க

வேண்டும்.

## உழவர் மன்ற கூட்டமைப்பு கலந்தாய்வுக் கூட்டம்

கண்டமங்கலம் .ஓ.டி.கண்டமங்கலம் பி :, அலுவலகத்தில் நபார்டு உழவர்மன்ற கூட்டமைப்பு கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது.

வட்டார உழவர் மன்ற தலைவர் நடராஜன் தலைமை தாங்கினார் .நபார்டு வங்கியின் மண்டல உதவி பொது மேலாளர் விக்ரமன் முன்னிலை வகித்தார் . கூட்டத்தை ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவி நெடுஞ்செழியன் துவக்கி வைத்துப் பேசினார்.

நபார்டு வங்கி துணை பொது மேலாளர் விக்ரமன், கண்டமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் வேல், வேளாண்மை அலுவலர் கவுஸ், வேளாண் வணிகத்துறை வேளாண் அலுவலர் சக்திவேல் பேசினர்.

புதிய நிர்வாகிகள் தேர்வு: நபார்டு உழவர்மன்ற கூட்டமைப்பிற்கு கண்டமங்கலம் வட்டார அளவிலான நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்வட்டார . தலைவராக நடராஜன், துணைத்தலைவராக முருகையன், செயலாளராக சச்சிதானந்தம், துணை செயலாளராக அருள், பொருளாளராக குப்புசாமி, ஆலோசகராக வைத்தியலிங்கம் மற்றும் 10 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்துணை தலைவர் . முருகையன் நன்றி கூறினார்.

## கோமாரி நோய் தடுப்பு முறை குறித்து விழிப்புணர்வு ஆலோசனை கூட்டம்

உளுந்தூர்பேட்டை உளுந்தூர்பேட் :டை தாலுகா அலுவலகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு ஆலோசனை கூட்டம் நடந்தது.

சப்தாசில்தார் லலிதா .கலெக்டர் சுபோத்குமார் தலைமை தாங்கினார்-, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் அழகரசன் முன்னிலை வகித்தனர். பி.ஓ.டி., சாந்தகுமாரி, மண்டல துணை தாசில்தார் வெங்கடேசன், பேரூராட்சி தலைவர் ஜெய்சங்கர், கால்நடைத்துறை உதவி இயக்குநர்கள் மகேந்திரன், இளங்கோவன், டாக்டர்கள் தமிழ்மணி, சிவசங்கரி, இளவரசு, முருகேசன், சுரேஷ்குமார், தமிழரசு, வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

சப்கலெக்-டர் சுபோத்குமார் கூறுகையில், கால்நடைகளுக்கு நோய் பரவ

சாதகமான சூழ்நி லைகள், நோய் பரவும் முறை, நோய் அறிகு றிகள், தடுப்பு முறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## விவசாய சங்கம் ஆர்ப்பாட்டம்

நாமக்கல்தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட தொழிலாளர்களுக்கு" :, வங்கிக் கணக்கு துவங்க வேண்டும்' என விவசாய தொழிலாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின், நாமக்கல் மாவட்ட குழுவின் சார்பில், நேற்று, ஆர்ப்பாட்டம் நடந்ததுமாவட்ட தலைவர் செங்கோடன் . .தலைமை வகித்தார்

ஆர்ப்பாட்டத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில், அரசு அறிவித்த கூலியை தர வேண்டும். வேலையின் அளவை, 22 அடியாக குறைக்க வேண்டும் . பணி செய்யும் இடத்தில், நிழற்பந்தல், குடிநீர், மருத்துவ உதவிப் பெட்டி வைக்க வேண்டும்வேலைக்கான . அட்டை வைத்திருக்கும் அனைத்து தொழிலாளருக்கும், வங்கிக் கணக்கு துவங்க வேண்டும்சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகத்தின் . சார்பில், மண்வெட்டி, கூடை உள்ளிட்ட உபகரணங்கள் வழங்க வேண்டும். வாரத்தின் அனைத்து நாட்களுக்கும் வேலை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டது.

அகில இந்திய துணைத் தலைவர் திருநாவுக்கரசு, மாவட்டச் செயலாளர் ரங்கசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தர்மபுரியில் வடகிழக்கு பருவ மழைஅணைகளில் நீர் மட்டம் !கை கொடுத்தது… உயர்வு

தர்மபுரிவடகிழக்கு பருவமழை காரணமாக :, மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தர்மபுரி மாவட்டம், விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் . மாவட்டத்தில் உள்ள விளை நிலங்களில் மா, நெல், தக்காளி, கரும்பு, மஞ்சள், பருத்தி, மரவள்ளி கிழங்கு, துவரை, கேழ்வரகு உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில்

சாகுபடி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் பெய்யும் தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழையை கொண்டும், அணை மற்றும் கிணற்று பாசனம் மூலமும் விவசாயிகள், பயிர்களை சாகுடி செய்கின்றனர்மாவட்டத்தில் உள்ள வாணியாறு ., சின்னாறு, தொப்பையாறு, நாகவதி, கேசர்குழி, தும்பலஹள்ளி, வரட்டாறு உள்ளிட்ட அணைகள் மூலம் விவசாயிகள், 11 ஆயிரத்து, 116 ஹெக்டேரில் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன், அணை பாசன பகுதிகளில் விவசாயிகள், இரண்டு போகம் நெல் சாகுபடி செய்து வந்தனர். கடந்த ஆண்டு, போதிய பருவமழை பெய்யாததால், மாவட்டத்தில் உள்ள, ஏழு அணைகளில் தொப்பையாறு அணையை தவிர, மற்ற, ஆறு அணைகளும் தண்ணீர் இன்றி வறண்டன. இதனால், அணை பாசன வசதியை நம்பி கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்மேலும் ., இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளை, சில மாதங்கள் பருவமழை ஏமாற்றியதால், ஆடி பட்டங்களில், பயிர்களை சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை காலத்தின் இறுதியில் பெய்த மழை காரணமாக, மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்கி வருவதுடன், வறண்டு கிடந்த வாணியாறு, சின்னாறு, தொப்பையாறு, நாகவதி, கேசர்குழி, வறட்டாறு உள்ளிட்ட அணைகளுக்கு நீர் வரத்து துவங்கியது. வடகிழக்கு பருவமழை, தர்மபுரி மாவட்டத்தில் தீவிரம் அடைந்ததுமாநில . அளவில், சென்னைக்கு அடுத்த படியாக, தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதம் வட கிழக்கு பருவமழை பெய்தது.

இதனால், மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வடகிழக்கு பருவமழை காரணமாக தற்போது, 65.27 அடி கொள்ளவு கொண்ட வாணியாறு

அணையில், 43.30 அடியும், 34.45 அடி கொள்ளவு கொண்ட வறட்டாற்று அணையில், 25அடியும், 50. 18 அடி கொள்ளவு கொண்ட தொப்பையாறு அணையில், 25.74 அடி தண்ணீரும், 25.2 அடி கொள்ளவு கொண்ட கேசர்குழி அணையில், 12.07அடியும், 24.6 அடி கொள்ளவு கொண்ட நாகவதி அணையில், 10.16அடியும், 50 அடி கொள்ளவு கொண்ட சின்னாற்றில், 19.80 அடியும் தண்ணீர் உள்ளது.

மேலும், ஈச்சம்பாடி அணையில், தற்போது பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், 17.35 அடி நீர் மட்டம் உள்ளது. மேலும், மாவட்டத்தில் அவ்வப்போது பெய்து வரும் மழை காரணமாக, இந்த அணைகளுக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டுள்ளதால், அணையின் தண்ணீர் நீர்மட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.11.2013**

**சர்க்கரை உற்பத்தி 3% சரிவு: மத்திய அமைச்சர் கணிப்பு**



புதுடெல்லி நாட்டில் இந்த ஆண்டு சர்க்கரை உற்பத்தி சுமார் :3 சதவீதம் அளவுக்கு குறைந்து மொத்தம் 2.44 கோடி டன்களாக இருக்கும்ஆனால் ., உள்நாட்டின் தேவையை நிறைவு செய்வதாக இருக்கும் என்று மத்திய உணவுத் துறை அமைச்சர் கே .தாமஸ் தெரிவித்தார் .வி.2013-14 சந்தை ஆண்டில் - அக்டோபர்) செப்டம்பர் ( நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தி2.50 கோடி டன்களாக இருக்கும் என்று இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் மதிப்பீடு செய்துள்ளதுஆனால் ., இதைவிட குறைவாக இருக்கும் என்று அரசு மதிப்பீடு செய்துள்ளது.

கடந்த ஆண்டில் )2012-13) மொத்தம் 2.51 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டதுஆனால் ., அதைவிடகுறைவாக இந்த ஆண்டில் 2.44 கோடி டன்னாக இருக்கும் என்று தாமஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்உலகில் அதிக . அளவில் சர்க்கரையை பயன்படுத்தும் இந்தியா, உற்பத்தியில் பிரசில் நாட்டுக்கு அடுத்தபடியாக 2வது இடத்திலும் உள்ளது.

இந்த ஆண்டு உள்நாட்டு தேவை 2.35 கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பீடு

செய்யப்பட்டுள்ளதுஎனவே . உற்பத்தியாகும் சர்க்கரையை வைத்து சமாளித்துவிடலாம் தேவை .2.35 கோடி டன். ஏற்கனவே கையிருப்பில் 89 லட்சம் டன் உள்ளதுஎனவே நமது நிலை திருப்தி . அளிக்கக்கூடிய வகையில்தான் உள்ளது என்று தாமஸ் மேலும் கூறினார்.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக, உள்நாட்டின் தேவையைவிட அதிக அளவில் சர்க்கரை உற்பத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

**குளிர்சாதன வசதியுடன் குடோன்கள் இல்லாததால் ஆண்டுக்கு 18 சதவீதம் காய்கறி, பழங்கள் வீண்**



புதுடெல்லிஇந்தியாவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய குடோன்கள் போதிய : அளவில் இல்லாததால் ஆண்டுக்கு உற்பத்தி செய்வதில் 18 சதவீதம் அளவுக்கு காய்கறி, பழங்கள் வீணாகிறதுவிளைச்சல் .இதன் மதிப்பு பல ஆயிரம் கோடி . இருந்தும் சேமிப்பு கிடங்கு வசதி இல்லாததால் இந்த துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளது.


காய்கறி, பழங்கள் உற்பத்தி செய்வதில் உலகிலேயே 2வது இடத்தில் இந்தியா உள்ளதுஆனால் ., அவற்றை பாதுகாப்பதற்கு போதுமான குளிர்சாதன வசதி கொண்ட குடோன்கள், குளிர்சாதன வசதியுடன் கூடிய பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் போதிய அளவில் இல்லாததால் ஆண்டுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான காய்கறி, பழங்கள், தானியங்கள் வீணாகிறது.

இந்த தகவலை அமெரிக்காவை மையமாக கொண்ட, எமர்சன் கிளைமேட் டெக்னாலேஜிஸ் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளதுகுளிர்சாதன . வசதியுடன் கூடிய குடோன்கள் போதிய அளவில் இல்லாததால், இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த காய்கறி, பழங்களில் 18 சதவீதம் வீணாகிறது.

இதன் மதிப்பு மட்டுமே ஆண்டுக்கு பல ஆயிரம் கோடிதற்போது இந்தியா . முழுவதுமே சுமார் 6,300 குளிர்சாதன வசதி கொண்ட குடோன்கள் தான் இருக்கிறதுஇதில் . 30.11 மில்லியன் டன் அளவிற்கே காய்கறி, பழங்களை சேமித்து வைக்க முடியும். இந்த குளிர்சாதன வசதி கொண்ட குடோன்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது அவசியமாகிறதுஇப்படி செய்வதன் மூலம் . காய்கறி, பழங்கள் வீணாவதை ஓரளவு குறைக்க முடியும்.

இந்த குடோன்களை உருவாக்க 550.74 பில்லியன் ரூபாய் முதலீடு செய்ய வேண்டும் இது வரும் .2015-2016ம் ஆண்டுக்குள் கட்டி முடித்தால், காய்கறி, பழங்களின் உற்பத்தியை பெருக்கி பாதுகாக்க முடியும் என்று அந்த நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

**அரசு கூட்டுறவு ஏல மையத்தில் தேயிலை தூள் விலை ரூ.4 சரிவு**



குன்னூர் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை மையத்தில் இந்தாண்டுக்கான : 48வது ஏலம் நேற்றுமுன்தினம் நடந்தது மொத்தம் .4லட்சத்து 56ஆயிரத்து 54கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது இதில் இலை ரகம் .2லட்சத்து

43ஆயிரத்து 69 கிலோ, டஸ்ட் ரகம் 2லட்சத்து 13ஆயிரத்து 285 கிலோ அடங்கும் . வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர்அனைத்து ரகத்திற .ும் கிலோவுக்கு ஸி4 வரை விலை குறைந்தது .60 சதவீத தேயிலை தூள் விற்றது.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரக சாதா வகை கிலோ ஒன்று ரூ.70 முதல் ரூ.75 வரை, உயர்ரகம் ரூ.80 முதல் ரூ.85 வரை, டஸ்ட் ரக சாதா வகை ரூ.75 முதல் ரூ.82 வரை, உயர்வகை ரூ.85 முதல் ரூ.96 வரையிலும் விலை கிடைத்தது.

**நடப்பு காரீப் பருவத்தில் 46,848 டன் நெல் கொள்முதல் தஞ்சை விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்**

தஞ்சை, : தஞ்சையில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்குநாள் கூட்டத்தில் கலெக்டர் சுப்பையன் பேசியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டு குறுவை பருவத்தில் 28 ஆயிரத்து 294 எக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை முடிந்துள்ளது.

எக்டேருக்கு சராசரியாக 7 ஆயிரத்து 151 கிலோ நெல் மகசூல் கிடைத்துள்ளது . நடப்பு சம்பா பருவத்தில் 1 லட்சத்து 18 ஆயிரத்து 140 எக்டேரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 530 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது மேலும் .123 எக்டேர் நாற்று சம்பா நடவுக்கு தயார் நிலையில் உள்ளது நேரடி நெல் விதைப்பின் மூலம் .2 ஆயிரத்து 682 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது தாளடியில் .25 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 25 ஆயிரத்து 20 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் யூரியா 10 ஆயிரத்து 312 மெடன்னும்., டிஏபி 2 ஆயிரத்து 699 மெடன்னும்., பொட்டாஷ் 5 ஆயிரத்து 2 மெடன்னும்., காம்ப்ளக்ஸ் உரங்கள் 4 ஆயிரத்து 383 மெடன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் . சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு

விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
2013-14ம் ஆண்டில் அதாவது கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் கடந்த 25ம் தேதி வரை தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 18,237 பேருக்கு ரூ.6.73 கோடியும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 11,433 பேருக்கு ரூ.5.40 கோடியும் என மொத்தம் 29,670 பேருக்கு ரூ.12.12 கோடி பயிர்கடனாக வழங்கப்பட்டுள்ளது.
தீவிர கரும்பு சாகுபடி முறையில் ஒரு பருக்கரணைகள் மூலம் கரும்பு நடவு செய்து நுண்ணீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் திரவ உரங்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும்நுண்ணீர் .
பாசனம் அமைத்திட தேசிய தோட்டக்கலை முகமை மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படும்தஞ்சை மாவட்டத்தில் . 280 எக்டேரில் தீவிர கரும்பு சாகுபடிமுறை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுகொப்பரையை .
உலர வைத்திட ஏதுவாக சூரிய ஒளி உலர்கலன் அமைக்க ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறதுஒரத்தநாடு ., பட்டுக்கோட்டை, மதுக்கூர், பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் வட்டார விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறலாம்நடப்பு .
காரீப்2013-14ம் பருவத்தில் கடந்த அக்டோபர் 1ம் தேதி முதல் கடந்த 21ம் தேதி வரை தஞ்சை மாவட்டத்தில் 46,848 மெடன் நெல். கொள்முதல் செய்யப்பட்டுள்ளது கடந்த ஆண்டு இதே நாளில் .723 மெடன் கொள்முதல்.
செய்யப்பட்டுள்ளது என்றார் .
கூட்டத்தில், டிசுரேஷ்குமார் .ஓ.ஆர்., வேளாண் இணை இயக்குனர் சேகர் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்நிலுவை வசூல் சிறப்பு முகாம்.
பட்டுக்கோட்டை, : தமிழ்நாடு பதிவு துறை தலைவர் தர்மேந்திரபிரதாப்யாதவ் மற்றும் தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பை யன் ஆகியோர் உத்தரவின் படி வருவாய் மீட்பு சட்டத்தின் கீழ் நிலுவை வசூல் சிறப்பு முகாம் பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
முகாமில், பட்டுக்கோட்டை துணை சார்பதிவகம் 1 மற்றும் 2 ஆகியவற்றில் பதிவு செய்து நிலுவையிலிருந்த 69 கிராமங்களை சேர்ந்த 109 ஆவணங்களுக்கு

நேரிடையாக நோட்டீஸ் அனுப்பப்பட்டதில் 42 பேர் வருகை தந் தனர் .42 நபர்களிடமிருந்து ரூ 3 லட்சம் நிலுவை வசூல் செய்யப்பட்டது.
தஞ்சை மண்டல பதிவுத்துறை துணைத் தலைவர் ஹரி ஹரன் தலைமை வகித்தார் . தஞ்சை முத்திரை கட்டண தனித்துணை ஆட்சியர் செல்வராஜ், பட்டுக்கோட்டை தாசில்தார் பாஸ்கரன், பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் (பொறுப்பு ( .ராஜன்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

**நிலக்கடலையில் அதிக மகசூல் பெற எளிய வழிமுறை பேராவூரணி வேளாண் இயக்குனர் ஆலோசனை**

பேராவூரணி, : தஞ்சை மாவட்டம் பேராவூரணி வேளாண்மை கோட்டத்தில் கார்த்திகை, மார்கழி பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யவிருக்கும் விவசாயிகள் அதிக மகசூல் பெற எளிய வழிமுறைகள் குறித்து பேராவூரணி வேளாண்மை இயக்குநர் ஈஸ்வர் ஆலோசனை தெரிவித்துள்ளார்இதுகுறித்து . அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு :
பேராவூரணி வட்டாரத்தில் கார்த்திகை கடைசி வாரத்திலிருந்து மார்கழி மாதம் முழுவதும் நிலக்கடலை சாகுபடி நடை பெறும் காலமாகும்இக்காலத்திற்கு . ஏற்ற பூச்சி, நோய் எதிர்ப்பு திறன் கொண்ட அதிக மகசூல் மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய 100, 105 நாட்கள் வயதுடைய ரகங்களான வி ஐ.ஆர்.2, டி வி.எம்.7 ரகங்களும், 110 நாட்கள் வயதுடைய வி ஐ.ஆர்.6 கோஜி),எண் (4 மற்றும் 95, 105 நாட்கள் வயதுடைய ஜே எல்.24 ரகங்களை தேர்வு செய்து விதைக்கலாம் . களைகள் மற்றும் பூச்சிநோய் தாக்குதலை கட்டுப்படுத்த வறட்சியை தாங்கி வளர காய்கள் அதிகம் பிடித்திட நல்ல உழவுமுறை அவசியம்வேர்அழுகல் ., தண்டு அழுகல் மற்றும் இலைப்புள்ளி நோய்களை கட்டுப்படுத்த ரசாயான பூஞ்சாணக்கொல்லி  கார்பன்டைசிம்)2 கிராம் /1 கிலோ விதைக்குஅல்லது ( உயிரியல் பூஞ்சாண மருந்தான டிரைகோ டெர்மா விரிடி 4 கிராம் 1 கிலோ விதைக்கு கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்கலாம் வரிசைக்கு வரிசை .30 செமீ., செடிக்குச் செடிக்கு 10 செமீ.  இடைவெளி இருக்குமாறு விதைக்கவும்சதுர .

மீட்டருக்கு 33 செ.மீ இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்கவும். திரட்சியான காய்கள் கிடைத்திட ஒரு ஏக்கருக்கு 5 கிலோ கடலை, நுண்ணூட்டத்தினை 20 கி விதைத்த .லோ மணலுடன் கலந்து விதைப்பிற்கு பின் தூவலாம்.45 -வது நாள் அல்லது  இரண்டாம் களை எடுக்கும் போது விழுதுகள் நன்கு இறங்கி அதிகமான காய்கள் பிடிக்க செடிகளை சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும்நல்ல . திரட்சியான காய்கள் பெற்றிட டிஏபி 1 கிலோ., அம்மோனியம் சல்டபேட் 400 கிராம், போரக்ஸ் 200 கிராம் 15 லிட்டர் நீரில் முதல்நாள் ஊறவைத்து  மறுநாள் காலை கரைசலை வடிகட்டினால் கிடைக்கும் 13 லிட்டர் கரைசலுடன் 167 லிட்டர் நீர் சேர்த்து தெளிப்பதுடன் பிளானோபிக்ஸ் மருந்தினை 25 மற்றும் 35 -வது நாள் தெளிப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற  முடியும்.

அதிக வருமானம்

பெற ஊடுபயிர்

பூச்சிநோய்களை கட்டுப்படுத்த அதிக வருமானம் பெற கம்பு, துவரை, பயறு வகை ஆமணக்கு போன்ற பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம்.

**போக்கு காட்டும் பருவமழை வெங்காய விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் கவலை**

திருமங்கலம், : வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால் திருமங்கலம் பகுதியில் வெங்காய பயிர் நீரின்றி வாடுகிறதுவிவசாயிகள்  . கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

திருமங்கலத்தைச் சுற்றியுள்ள எட்டுநாழி, எட்டுநாழிபுதூர், உலகாணி, கூடக்கோவில், அரசங்குளம், பாரைப்பத்தி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சின்ன வெங்காயம் ஏராளமான ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். விதைத்த 60 நாட்களில் வெங்காயம் அறுவடைக்கு வந்துவிடும்இந்தாண்டு போதிய . மழை இல்லாததால் வெங்காய பயிர் நீரின்றி வாடுகிறதுஇதனால் ., நடவு செய்த 90 நாளில்தான் வெங்காயம் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுநீரின்றி வெங்காயச் . செடிகள் வாடுவதால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்மழை பொய்யும் . சீசனில், தற்போது பனிப்பொழிவு இருப்பதால் வெங்காய செடிகள் அழுகிவிடும் நிலை

ஏற்பட்டுள்ளது.

எட்டுநாழியை சேர்ந்த விவசாயிகள் லட்சுமணன், பெருமாள் கூறுகையில்,

“ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசியில் விதை வெங்காயம் வாங்கி பயிரிடுவோம் . ஆனால் .இரண்டே மாதங்களில் விளைச்சல் கிடைக்கும், இந்தாண்டு வடகிழக்கு பருவமழை போதிய அளவில் இல்லாததால், வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது விளைச்சல் காண .90 முதல் 100 நாள்கள் வரை பிடிக்கும் நிலை உருவாகியுள்ளதுமின்தடையால் பம்ப்செட் மூலமும் தண்ணீர் பாய்ச்ச . முடியவில்லை.விதை வெங்காயம் விலை இந்தாண்டு கடுமையாக உயர்ந்துள்ளது . ஏக்கருக்கு 450 கிலோ விதை வெங்காயம் தேவைப்படுகிறதுஇந்தாண்டு .

இதன்விலை30 ஆயிரமாக உயர்ந்துள்ளதுகளையெடுக்க கூலி அதிகளவில் தர . வேண்டியுள்ளது. இதனால் லாபம் கிடைப்பது அரிதுதான் என்றனர்.

**கோமாரி நோய் வராமல் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி அவசியம்**

ஈரோடு, : ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் யசோதை, உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், கவிதா ஆகியோர் தெரிவித்துள்ளதாவதுகால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி : நோயானது வாய்சப்பை, கால் சப்பை, வாய் காணை, கால்காணை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இந்த நோயானது பெரும்பாலும் மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்குகிறது . இந்த நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகும்ஒரு . முறை போடப்படும் தடுப்பூசி மூலம் 4 மாத காலத்திற்கு கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு திறனை கூட்டலாம்.

பல்வேறு காரணங்களால் தடுப்பூசி போடாத கால்நடைகளில் நோய் எதிர்ப்பு திறன் குறையும்போது இந்த நோய் ஏற்படுவதை தடுக்க இயலாதுஇதுபோன்ற . நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமாக நோய் பாதிப்பை குறைக்கலாம்.

வாய் மற்றும் நாக்கில் புண் இருப்பதால் பசுந்தீவனம், உலர் தீவனங்களை உட்கொள்ள இயலாதுஆகையால் கஞ்சி காய்ச்சி ஆற வைத்து கால்நடைகளுக்கு .

கொடுக்கலாம். இயற்கை வழி சிகிச்சை முறைகளையும மேற்கொள்ளலாம்.
சீரகம், வெந்தயம் மற்றும் மிளகு போன்றவற்றை தலா 20 கிராம் எடுத்து ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நன்கு அரைக்க வேண்டும் பின்னர் இதனுடன் .20 கிராம் மஞ்சள், பூண்டு நான்குபல், 100 கிராம் வெல்லம் போன்றவற்றை சேர்த்து பசைபோல தயார் செய்ய வேண்டும்.
இறுதியாக முழு தேங்காயில் இருந்து பெறப்பட்ட தேங்காய் துருவலை சேர்க்க வேண்டும்இதனை சரிபாதியாக காலை ., மாலை வேளைகளில் கொடுக்க வேண்டும் கலவை கொடுத்த பிறகு இறுதியாக .50 கிராம் அளவிற்கு வெண்ணெய், நெய் சேர்த்து வாய்ப்புண்ணின் மேல் தடவினால் சீக்கிரம் ஆறிவிடும்இதனை . குறைந்தது 4, 5 நாட்கள் வரை தொடர்ந்து செய்து வரவேண்டும்.
கால் குளம்புகளில் உள்ள புண் மற்றும் மடிக்காம்புகளில் உள்ள புண்ணிற்கு பூண்டு 10 பல், மஞ்சள் 10 கிராம், துளசி, குப்பைமேனி, மருதாணி, வேப்பிலை தலா 10 இலைகள் போன்றவற்றை நன்கு அரைத்து அதனுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சேர்த்து 10 நிமிடம் வரை சூடுபடுத்தி பின்னர் ஆறவைக்க வேண்டும்.
இதனை கால்குளம்பு, மடிக்காம்பு மீது தடவி விட வேண்டும்மேலும் . கால்நடைகளை பொதுவான மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது . மாடுகளை வாங்குதோ, விற்பதோ கூடாதுவெளி ஆட்களை பண்ணைக்குள் . கால்நடைகள் .அனுமதிக்க வேண்டும் உள்ள கொட்டகையின் தரைப்பகுதியை நன்கு சுத்தம் செய்து அதன் மேல் சுண்ணாம்பு தூள் அல்லது பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும்இவ்வாறு செய்வதன் மூலமாக . கிருமிகளின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கால்நடைகளை நோயில் இருந்து காப்பாற்றலாம் என்று தெரிவித்துள்ளனர்.

**கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி ஈரோட்டில் மாட்டுச் சந்தைகளை தற்காலிகமாக மூட கலெக்டர் உத்தரவு**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் வேகமாக பரவி வரும் கோமாரி நோயின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் செயல்பட்டு வரும் கால்நடை சந்தைகளை மூட மாவட்ட கலெக்டர் சண்முகம் நேற்று உத்தரவிட்டார்.

கோமாரி தொற்று நோய் பரவுவதை தடுக்கும் வகையில் கால்நடைத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதுமேலும் கால்நடைகளுக்கு . கோமாரி தொற்ற ு நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும் வகையில் விஏஓ., ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகள், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை உதவியாளர்கள் மத்தியில் கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

கிராமங்கள் தோறும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிக்கான முகாம், கால்நடைகள் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேடுகளை கால்நடை மருத்துவர்கள் வைத்திருக்க வேண்டும்வெளி . மாவட்டங்களில் இருந்து ஈரோடு மாவட்டத்துக்கு வாகனங்களில் கொண்டு வரப்படும் கால்நடைகளால் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் வெளி மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் கால்நடைகள் கொண்டு வர முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு கருங்கல்பாளையத்தில் புதன், வியாழக்கிழமையிலும், புளியம்பட்டியில் வியாழக்கிழமை, கோபி மொடச்சூரில் சனிக்கிழமை, அந்தியூர் ஞாயிற்றுகிழமை, சீனாபுரத்தில் வெள்ளிக்கிழமையிலும் நடைபெறும் மாட்டுச்சந்தைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கால்நடைகளை கட்டி வைக்கப்படும் கொட்டகை யை சுற்றிலும் சலவை சோடா உப்பு அல்லது பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை தூவி நோய்கிருமிகளை அழிக்கவும் . கிராமங்களில் நடைபெறும் கால்நடை மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட்டு நோய் பரவுவதை தடுக்க பொதுமக்கள் உதவி செய்ய வேண்டும் என ஈரோடு மாவட்ட கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

**கோமாரி நோய் வராமல் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி அவசியம்**

ஈரோடு, : ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் யசோதை, உதவி பேராசிரியர்கள் கிருபாகரன், கவிதா ஆகியோர் தெரிவித்துள்ளதாவதுகால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி : நோயானது வாய்சப்பை, கால் சப்பை, வாய் காணை, கால்காணை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இந்த நோயானது பெரும்பாலும் மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்குகிறது .

இந்த நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகும்ஒரு . முறை போடப்படும் தடுப்பூசி மூலம் 4 மாத காலத்திற்கு கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு திறனை கூட்டலாம்.

பல்வேறு காரணங்களால் தடுப்பூசி போடாத கால்நடைகளில் நோய் எதிர்ப்பு திறன் குறையும்போது இந்த நோய் ஏற்படுவதை தடுக்க இயலாதுஇதுபோன்ற . நோய் ஏற்பட்ட மாடுகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமாக நோய் பாதிப்பை குறைக்கலாம்.

வாய் மற்றும் நாக்கில் புண் இருப்பதால் பசுந்தீவனம், உலர் தீவனங்களை உட்கொள்ள இயலாதுஆகையால் கஞ்சி காய்ச்சி ஆற வைத்து கால்நடைகளுக்கு . .கொடுக்கலாம் இயற்கை வழி சிகிச்சை முறைகளையும மேற்கொள்ளலாம்.

சீரகம், வெந்தயம் மற்றும் மிளகு போன்றவற்றை தலா 20 கிராம் எடுத்து ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நன்கு அரைக்க வேண்டும் பின்னர் இதனுடன் .20 கிராம் மஞ்சள், பூண்டு நான்குபல், 100 கிராம் வெல்லம் போன்றவற்றை சேர்த்து பசைபோல தயார் செய்ய வேண்டும்.

இறுதியாக முழு தேங்காயில் இருந்து பெறப்பட்ட தேங்காய் துருவலை சேர்க்க வேண்டும்இதனை சரிப .ாதியாக காலை, மாலை வேளைகளில் கொடுக்க வேண்டும் கலவை கொடுத்த பிறகு இறுதியாக .50 கிராம் அளவிற்கு வெண்ணெய், நெய் சேர்த்து வாய்ப்புண்ணின் மேல் தடவினால் சீக்கிரம் ஆறிவிடும்இதனை . குறைந்தது 4, 5 நாட்கள் வரை தொடர்ந்து செய்து வரவேண்டும்.

கால் குளம்புகளில் உள்ள புண் மற்றும் மடிக்காம்புகளில் உள்ள புண்ணிற்கு பூண்டு 10 பல், மஞ்சள் 10 கிராம், துளசி, குப்பைமேனி, மருதாணி, வேப்பிலை தலா 10 இலைகள் போன்றவற்றை நன்கு அரைத்து அதனுடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சேர்த்து 10 நிமிடம் வரை சூடுபடுத்தி பின்னர் ஆறவைக்க வேண்டும்.

இதனை கால்குளம்பு, மடிக்காம்பு மீது தடவி விட வேண்டும்மேலும் . கால்நடைகளை பொதுவான மேய்ச்சல் நிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது . மாடுகளை வாங்குதோ, விற்பதோ கூடாதுவெளி ஆட்களை பண்ணைக்குள் . கால்நடைகள் .அனுமதிக்க வேண்டும் உள்ள கொட்டகையின் தரைப்பகுதியை

நன்கு சுத்தம் செய்து அதன் மேல் சுண்ணாம்பு தூள் அல்லது பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும்இவ்வாறு செய்வதன் மூலமாக . கிருமிகளின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கால்நடைகளை நோயில் இருந்து காப்பாற்றலாம் என்று தெரிவித்துள்ளனர்.

**விவசாய நிலங்களில் நுண்ணூட்ட சத்து குறைவிற்குரசாயன உரமே காரணம் வேளாண் பேராசிரியர் குற்றச்சாட்டு**

புதுக்கோட்டை, : வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நெல்லில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த பயிற்சி நடைபெற்றது. நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்அசோகன் தலைமை வகித்தார் . வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் சாமிநாதன் முன்னிலை வகித்து பேசுகையில்;

நெற்பயிர் நல்ல விளைச்சலை தர 16 வகையான பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துகள் தேவைப்படுகின்றனஇச்சத்துக்களை நெற்பயிர் . மண்ணிலிருந்து எடுத்துக் கொள்கிறதுஇதனை ஈடு செய்ய உழவர்கள் தொழு உர .ம், மற்றும பசுந்தழைகளை மண்ணில் இட்டனர்ஆனால் பசுமை புரட்சியின் போது . அறிமுகப்படுத்தப்பட்ட உயர் விளைச்சல் ரகங்களுக்கு இவை போதுமானதாக இல்லை. எனவே இதனை ஈடுகட்ட செயற்கை உரங்களையும் சேர்த்து பயன்படுத்த ஆரம்பித்தனர் நாளடைவில் தொழுஉரம், பசுந்தாள் உரம் போன்றவற்றின் பயன்பாடு குறைந்து செயற்கை உரங்களை அதிகம் பயன்படுத்த தொடங்கினர்இதனால் தொடர்ந்து நெல் . சாகுபடி செய்த நிலங்களில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை ஆரம்பித்தது. மேலும் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியல் குணங்களும் மாறினஇதனால் மகசூல் . வெகுவாக பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தேவையான சத்துகள் பயிர்களுக்குத் தேவையான தருணத்தில் கிடைக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மிகவும் அவசியமாகிறது . இதற்கேற்ப இயற் கை எருக்காளன் பசுந்தாள் உரம், தொழுஉரம், கம் போஸ்ட், மக்கிய தென்னை நார் கழிவு போன்றவற்றுடன் செயற்கை உரங்களான யூரியா, சூப்பர்பாஸ்பேட், பொட்டாசியம் குளோரைடு, அம்மோனியம் சல்பேட் உரங்களை

யும் உயிர் உரங்களான நீலப்பச்சைபாசி, அசோலா, பாஸ்போபாக்டீரியா, அசோஸ்பைரில்லம் போன்றவற்றை சேர்த்து சமச்சீராக அளிப்பதே ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் ஆகும்இதனால் மண் வளம் . பெர ுகுவதோடு செயற்கை உரத்தின் தேவையும் குறைக்கப்பட்டு வருவாய் அதிகரிக்கிறதுஇதற்கு . நாற்றாங்களிலேயே ஒரு சென்ட்டிற்கு 52 கிலோ டி .பி.ஏ. மேலும் .இடவேண்டும் களிமண் நிலங்களில் வேர் அறுபடுவதை தவிர்க்க நாற்று பறிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு சென்டிற்கு இரண்டு கிலோ ஜிப்சம் இடவேண்டும் .8 சென்டிற்கு 2 பாக்கெட் அசோஸ்பைரில்லத்தை நீரில் கரைத்து விட்டு மறுநாள் நாற்றுகளை பறிக்க வேண்டும்.

நடவு வயலில் எப்பொழுதம் மண் ஆய்வு அடிப்படையில் செயற்கை உரங்களை இடவேண்டும்மண் பரிசோதனை செய்யப்படாத . வயல்களுக்கு எக்டருக்கு 150:50:50 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவேண்டும் .

நடவு வயலில் எக்டருக்கு12.5 டன் தொழுஉரம் அல்லது 6.25 டன் பசுந்தாள் உரத்தை பத்து நாட்களுக்கு முன்பே வயலில் இட்டு, உழுது மண்ணுடன் கலக்க வேண்டும் .30 கிலோ தழைச் சத்தையும் 50 கிலோ மணிச்சத்தையும் 25 கிலோ சம்பல் சத்தையும் அடியுரமாக இடவேண்டும்நெல் வயலில் . இடப்படும் யூரியா ஆவியாவதாலும் வேர் பகுதிக்கு கீழே சென்று விடுவதாலும் சுமார் 30 சதம் மட்டுமே பயிர்களுக்கு கிடைக்கும்தற்பொழுது தழைச்சத்து வீணாகமல் . தடுப்பதற்கும், தேவையான அளவு மட்டுமே வழங்குவதற்கும் 4 நிறபட்டைகளை இலைவண்ண அட்டை பயன்படுத்தப்படுகிறதுஇந்த அட்டையை பயன்படுத்தி . இலையின் பச்சை நிறம் அட்டையின் குறியீட்டு அளவான 4க்கு கீழே இருந்தால் சம்பா பயிருக்கு ஒரு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்தை நட்ட 14 ம் நாளிலிருந்து பூக்கும் தருணம்வரை இடவேண்டும் இந்த முறையில் எக்டருக்கு .20 முதல் 40 கிலோ வரை சேமிக்கப்படுகிறது என்றார் .

இந்த பயிற்சியின் போது இலைவண்ண அட்டை பயன்படுத்துவது குறித்தும், நெல்லில் இனக்கவர்ச்சி பொறி பயன்படுத்துவது குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**சிறு, குறு விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகையில் 55 சதவீதம் மானியம்குறைதீர் கூட்டத்தில் டிஆர்ஓ தகவல்**

புதுக்கோட்டை, : இயற்கை இடர்பாடுகளில் இருந்து பயிரை பாதுகாத்து, மகசூல் இழப்பை தவிர்க்கும் பொருட்டு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் சேரும் சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு காப்பீட்டு பிரீமியத் தொகையில் 55 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்று டிஆர்ஓ மாரிமுத்து கூறினார்.
புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது இக்கூட்டத்தில் டிஆர்ஓ .மாரிமுத்து தலைமை வகித்து பேசியதாவது, விவசாயிகள் தரமான சான்று விதைகளை வேளாண் விரி வாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்யுமாறும், உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளதுஅதேபோல் . விவசாயிகளுக்கு தேவையான தர மான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கிறதுமாவட்டத்தில் தற் . போது டிஏபி2,806 மெடன்னும்., யூரியா 2,409 மெடன்னும்., பொட் டாஷ் 1,157 மெடன்னும்., 2,897 மெடன் காம்ப்ளக்ஸ். உரங்களும் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது . சம்பா நெற்பயிரினை வறட்சி, வெள்ளம், போன்ற இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்து மகசூல் இழப்பினை தவிர்க்கும் வகையில் அனை த்து விவசாயிகளும் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன் பெற வேண்டும்இதற்காக . அரசு காப்பீட்டு பிரிமியத் தொ கையில் 55 சதவீதம் மானிய மாக சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கி வரு கிறதுசம்பா நெற்ப .யிருக்கு காப் பீட்டு தொகையான ஒரு ஏக்கருக்கு ரூ .12,944 என நிர்ணயிக்கப்பட்டு பிரிமியத் தொகை 2 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதுஇதன்படி ., ஒரு ஏக்கருக்கு சம்பா நெல் சாகுபடி செய் யும் விவசாயிகள் காப்பீட்டு பிரீமியத் தொகையாக ரூ.260 செலுத்த

வேண்டும். இந்த பிரீமியத் தொகையில் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 55 சதவீ தம் மானியமும் வழங்கப்படுகிறதுஎனவே வங்கிகளில் . கடன் பெறாத விவசாயிகள் காப்பீட்டு பிரீமிய தொகை யினை வரும் டிச .15க்குள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகளில் சேமிப்பு கணக்கு தொடங்கி அதில் பிரீமியம் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 எக்டரில் எண்ணெய் பனை சாகுபடி மேற்கொள்ள இலக்கு வழங்கப்பட்டு கந்தர்வக்கோட் டை, கறம்பக்குடி, அறந்தாங்கி, திருவரங்குளம் ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுதேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட் டார வேளாண் . விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன் அடையுமர்று கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

**விதை விற்பனை மையங்களில் ரெய்டு 12800 கிலோ போலி வீரிய ரக மக்காச்சோள விதைகள் பறிமுதல்**

ஈரோடு, : ஈரோடு , திருப்பூரில் போலி வீரிய ரக மக்காச்சோள விதைகள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் புகார் கூறி வந்தனர்அதன் பேரில் . ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இயங்கி வரும் விதை விற்பனை மையங்களில் திடீர் ஆய்வு நடத்த விதை ஆய்வு ஆணையர் உத்தரவிட்டார். இதைதொடர்ந்து ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் அண்ணாதுரை ஆலோசனையின் பேரில் அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள், வேளாண் உதவி அலுவலர்கள் மற்றும் விதை ஆய்வாளர்கள் விதை விற்பனை மையங்களில் நேற்று திடீர் ரெய்டு நடத்தினர்.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தமுள்ள 496 விதை விற்பனை மையங்களில் 110 கடைகளில் ரெய்டு நடத்தப்பட்டதுஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் . நடத்தப்பட்ட ரெய்டின் போது அங்கு விற்பனை செய்யப்பட்ட விதைகளின் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டனமுளைப்பு திறனில் தேர்ச்சி பெறாத . தரமற்ற வீரிய மக்காச்சோள விதைகள் 12800 கிலோ இருந்தது கண்டறியப்பட்டதுஇந்த விதைகளை . பறிமுதல் செய்து தரமற்ற விதைகளை

விற்பனை செய்ததற்காக சம்மந்தப்பட்ட விதை விற்பனை மையங்கள் மீது நீதிமன்றம் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதுகுறித்து விதை ஆய்வு துணை இயக்குநர் அண்ணாதுரை கூறுகை யில்:

ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் வீரிய மக்காச்சோளத்தை அதிகளவில் விவசாயிகள் சாகுபடி செய் கின்றனர்இவர்கள் . விதைச்சான்றுத்துறையில் விதை விற்பனை உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்களிடம் இருந்து மட்டுமே சான்று பெற்ற விதைகளை வாங்கி உபயோகிக்க வேண்டும்ஒவ்வொரு . விவசாயியும் விதைகளை வாங்கியதற்கான ரசீதை கட்டாயம் விற்பனை நிலையத்தில் இருந்து தவறாமல் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்உரிமம் பெற்ற கடைகளில் கூட . தரமற்ற விதைகளை வீரிய ரக விதைகள் எனக்கூறி விற்பனை செய்வதாக புகார் வருகிறதுமேலும் போலி வீரிய ரக விதைகளை விவசாயிகள் வாங்கி ஏமாறாமல் . தடுப்பதற்காக கட்டாயம் சம்மந்தப்பட்ட கடைகளில் இருந்து விதை வாங்கியதற்கான ரசீதை கட்டாயம் வாங்க வேண்டும்இதன் மூலம் பின்னாளில் . விதை விற்பனையில் மோசடி செய்யப்பட்டதாக தெரிய வந்தால் சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் மீதும், விதை தயாரிப்பு நிறுவனத்தின் மீதும் வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கலாம்மேலும் விதைகளின் பற்றாக்குறையை அறிந்து . சில வெளி மாநில முகவர்கள் போலியான விதைகளை விவசாயிகளுக்கு விற்க முயற்சிப்பார்கள்எனவே . இதுபோன்ற நபர்களிடம் விவசாயிகள் ஏமாறாமல் இருக்கவும், போலி மற்றும் தரமற்ற வீரிய மக்காச்சோள விதைகளை வாங்கி ஏமாறுவதையும் தவிர்க்க வேண்டும்.

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில தரமற்ற வீரிய மக்காச்சோள விதைகள் விற்பனை செய்யப்படுவது தெரிய வந்தால் ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள கேஎஸ்டி., பில்டிங்கில் இயங்கி வரும் விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் அல்லது 0424-2268009 என்ற எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம்.

110 விதை விற்பனை மைங்களில் நடத்திய ரெய்டில் 12800 கிலோ போலி வீரிய ரக மக்காச்சோள விதைகள் பறிமுதல் செய்யப்பட்டனஇவ்வாறு அண்ணாதுரை . .தெரிவித்தார்

**மழை இல்லாததால் கைவிடப்பட்ட விவசாயம் செங்கல் தயாரிப்பில் விவசாய தொழிலாளர்கள்**

மானாமதுரை, : பருவமழை ஏமாற்றியதால் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்விவசாயத்தை நம்பியிருந்த விவசாயக்கூலிகள் . வேறுவழியின்றி செங்கல், விறகுகரி தயாரிப்பு தொழிலுக்கு திரும்பியுள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம்இந்தாண்டு மழையை நம்பி நேரடி விதைப்பு ., நாற்றுநடவு மூலம் நெல் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பருவமழை ஏமாற்றியது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுஇதனால் வயல்களில் . உழுவுப்பணி, நாற்று நடவு, களை எடுத் தல், உரமிடுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான விவசாயக்கூலி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்இதனால் கடந்த சில வாரங்களாக வேலையின்றி . தவித்த விவசாயக்கூலிகள் தாங்கள் ஏற்கனவே வேலை செய்த செங்கல் காளவாசல், விறகுக்கரி உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலைக்கு திரும்பியுள்ளனர் மானாமதுரை, திருப்புவனம், திருப்புத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி உள்ளிட்ட பகுதிகளில் காளவாசல், சேம்பர்கள் ஏராளமாக உள்ளனஇவற்றில் . பெரும்பாலானவை மானாமதுரையில் தான் இருக்கின்றனஇதுதவிர பரமக்குடி . அருகே மஞ்சூரிலும் செங்கல் சேம்பர்கள், காளவாசல்கள் உள்ளனசிவகங்கை ., ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான கட்டுமானத்தேவைக்கு இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் செங்கல்தான் அனுப்பப்படுகிறதுகடந்த . ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் வரை மழை பெய்ததால் இங்கு வேலை செய்த பலரும் விவசாயப்பணிகளுக்கு சென்றனர் . விவசாயப்பணிகள் நடக்கும் ஜனவரி மாதம் வரை செங்கல் தயாரிப்பு பணிகள் மந்தமாகவே இருக்கும்இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் . விவசாயப்பணிக்கு சென்ற பலரும் மீண்டும் பணிக்கு திரும்பி வருகின்றனர். இதுகுறித்து விவசாயத்தொழிலாளர் அழகர் கூறுகையில், பருவமழை தொடங்கும் காலம் முதல் 3 மாத காலத்துக்கு செங்கல் காளவாசல், விறகுக்கரி உற்பத்தியாகும் இடங்களுக்கு போகாமல் விவசாயப்பணிகளில் ஈடுபடுவது வழக்கம்ஆண்டுக்கு . ஒருமுறை விவசாயப்பணிகளில் ஈடுபட்டு அதில் கிடைக்கும் நெல்லை சாப்பாட்டு தேவைக்கு பயன்படுத்திக்கொள்வோம்இந்தாண்டு மழை பொய்த்துபோனதால் .

விவசாயவேலைகள் கிடைக்கவில்லைவேறுவழியின்றி மீண்டும் காளவாசலுக்கு .
வந்துவிட்டோம் என்றார்.

**இயந்திரம் உதவியுடன் கடலை விதைப்பு செயல்விளக்கம்**

திருச்சி, : வையம்பட்டி கருங்குளத்தில் இயந்திரம் உதவியுடன் கடலை விதைப்பு
செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.
திருச்சி மாவட்டம் வையம்பட்டி வட்டாரம் கருங்குளம் கிராமத்தில் முன்னோடி
விவசாயி ஆரோக்கியம் என்பவரின் வயலில் இயந்திரம் மூலம் கடலை விதைப்பு
செய்யப்பட்டது. கடலை சாகுபடியில் இயந்திர மயமாக்குதலை பரவலாக்கும்
நோக்கத்தை அடிப்படையாக கொண்டு செயல்விளக்க முகாம் நடந்ததுஇந்த .
செயல்விளக்கத்தை திருச்சி வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்)
.சந்திரசேகரன் பார்வையிட்டார்
பின்னர் அவர் கூறியதாவதுஅட்மா திட்டத்தின்கீழ் வையம்பட :ிடியில் இயந்திரம்
மூலம் கடலை விதைப்பு செய்யப்பட்டுள்ளதுகடந்தாண்டு ஒருங்கிணைந்த தானிய .
அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.20 ஆயிரம் மானிய விலையில் இந்த விதைப்பு
கருவி 3 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

கருங்குளம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து 50 விவசாயிகள்
பங்கேற்று பயனடைந்தனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி
இயக்குனர் சந்தான கிருஷ்ணன், உதவி வேளாண்மை அலுவலர் மாரிமுத்து,
அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப வல்லுனர்கள் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன பயிற்சி**

திருச்சி, : நார்வே நாட்டு நிதியுதவியுடன் கிளைமா அடாப்ட் திட்டத் தின்கீழ்
பொன்னனியாறு பாசன பகுதி விவசாயிக ளுக்கு தட்பவெப்ப நிலை
மாற்றங்களால் வேளாண் மையில் ஏற்படும் தாக் கங்கள், அதை எதிர்கொள் ளும்
முறைகள் குறித்த திறன் மேம்பாட்டு பயிற் சிகள் துவாக்குடி பாசன மேலா ண்மை
பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.
பொன்னனியாறு பாசன பகுதியில் உள்ள பெரிய அணைக்கரைப் பட் டியில்
சொட்டுநீர் பாசன தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி நடந்தது.

காய்கறி மற்றும் மலர் பயிர்களில் சொட்டுநீர் பாசனத்தின் அவசியம் குறித்து படங்களுடன் பாசன மேலாண்மை பயிற்சி நிலைய வல்லுநர் சீனிவாசன் பயிற்சி அளித் தார்மேலும் சொட்டுநீர் பாசனத்திற்கு அரசு துறை கள் மூலம் .
வழங்கப்படும் உதவிகள் மற்றும் அதை பெறுவதற் கான வழிமுறை குறித்து எடுத்து கூறினார்மைய . பேராசிரியர் கதிர் வேல், அக்ரி முத்துராமலிங் கம், முனைவர் ராமநாதன் ஆகி யோர் தொழில்நுட்ப பயிற்சி வழங்கினர்.
திருச்சி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் சந்திரசேகரன், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் ரவிச்சந் தி ரன், முத்தையா, வேளா ண்மை உதவி இயக் குனர் சந்தானகிருஷ் ணன், தோட்டக்கலை அலுவலர் ரேகா கலந்து கொண்டனர் . ஏற் பாடுகளை கிளைமா அட ா ப்ட் திட்ட அலுவலர் கள் ஜெனிபர், பாண்டிச் செல்வி ஆகியோர் செய் திருந்தனர்பயிற்சியில் முகா மில் . ஏராளமான பெண் விவசாயிகள் கலந்து கொண் டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

29.11.2013

**மேல் உரத்தினை பிரித்து இடுவதால் கூடுதல் மகசூல் பெறலாம் அதிகாரிகள் தகவல்**



இலுப்பூர்,

விவசாயிகள், சம்பா நெற்பயிருக்கு மேல் உரத்தினை பிரித்து இடுவதால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று வேளாண்மை அதிகாரி கள் தெரிவித்தள்ளனர்.

இது குறித்து புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜகான் மற்றும் குடுமியான்மலை வேளா ண்மை துணை இயக்குனர் சதானந்தம், வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளதாவது;-

<u>பூச்சித்தாக்குதல்</u>

புதுக்கோட்டை மாவட்டத் தில் சம்பா நெற்பயிர் சுமார் அறுபதாயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. தற்போது சம்பா

நெற்பயிருக்கு மேலுரம் இடுவதற்கு இதுவே சரியான தருணம் ஆகும். பொதுவாக விவசாயிகள் ரசாயன உரத்தை தேவைக்கு அதிகமாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ இடு கின்றனர்.

உரங்களை தேவைக்கு அதிகமாக இடுவதால் பூச்சி நோய் தாக்குதல் அதிக மாகிறது. அதே சமயம் தேவைக்குக் குறைவாக இடுவ தால் பயிருக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும்.

<u>மேல் உரம்</u>

எனவே விவசாயிகள் நெற் பயிருக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவினை மேலுரமாக இட வேண்டும். முதல் மேலுரமாக நடவு செய்த 20-25-வது நாளில் 1 ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவுடன் 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்து இட வேண்டும்.இதனுடன் 8 கிலோ பொட் டாஷ் உரத்தினையும் சேர்த்து மேலுரமாக இட வேண்டும். வேப்பம் புண்ணாக்கு யூரியா வுடன் கலப்பதால் யூரியா சத்து வீணாகாமல் பயிருக்கு முழுமையாக ஒரே சீராகக் கிடைக்க உதவுகிறது.

<u>அதிக மகசூல்</u>

2-வது மேலுரமாக நடவு செய்த 40-45-வது நாளில் 33 கிலோ யூரியாவுடன் 8 கிலோ பொட்டாஷ் உரத்தினை 1 ஏக்கருக்கு இட வேண்டும். 3-வது மேலுரமாக 70-வது நாளில் 33 கிலோ யூரியாவுடன் 8 கிலோ பொட்டாஷ் கலந்து இடவேண்டும். பொட்டாஷ் உரத்தை யூரியாவுடன் கலந்து இடுவதால் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதுடன் வாளிப்பான கதிரும் திரட்சி யான நெல்மணியும் கிடைக் கும். இதனால் கதிர் ஒரே தரு ணத்தில் வெளி வரும்.இப்படி மேலுரத்தைப் பிரித்து இடுவதால் உரம் வீணாகாமல் நெற்பயிருக்கு சீராக முழுமையாக எல்லாப் பருவத்திலும் கிடைத்து, மகசூல் அதிகமாக கிடைக்கும். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா நெல் பயிருக்கு மேற்கண்ட முறையில் மேலுரத்தினைப் பிரித்தளித்து கூடுதல் மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளனர்.

**பருத்தியில் வேரழுகல் நோயின் தாக்குதல் அதிகம் பாதிக்கப்பட்ட செடிகளை அழிக்க வேண்டுகோள்**



பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தியில் வேரழுகல் நோய் தாக்கப்பட்ட செடிகளை பிடிங்கி அழிக்க வேண்டும் என்று வேளாண்மை அதி காரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**<u>வல்லுநர்கள்குழு ஆய்வு</u>**

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பி.டி. பருத்தியில் வேரழுகல் நோயின் தாக்குதல் அதிகமாக காணப்படுகின்றது. எனவே பாதிக்கப்பட்ட வயல்களை பருத்தி ஆராய்ச்சி நிலையம், வேப்பந்தட்டை பேராசிரி யர்கள், வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் ரோவர் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லு நர்கள் கொண்ட குழு ஆய்வு செய்ததில் வேரழுகல் நோயின் பாதிப்பு என தெரிகிறது.

**<u>மண் மூலம் பரவும்</u>**

இந்த வேரழுகல் மண் மூலம் பரவக்கூடிய நோயாகும். இந்த நோய் மண்வாழ் பூஞ்சை களான ரைசோக்டோனியா பட்டாட்டிகோலா மற்றும் ஸ்கிளிரோஸியம் ரால்ப்ஸி போன்றவற்றின் மூலம் ஏற் படுகின்றது. இந்த நோய்க் காரணிகள் பருத்தியின் வேர்ப் பகுதியைத் தாக்கி அழிப்பதால் செடிகள் காய்ந்து விடுகின்றது. இதன் தாக்கு தலால் வேரின் தோல்பகுதி முற்றிலுமாக சிதைந்து விடும். பின்னர் இலைகள் கருகி மொத்தமாக காய்ந்து விடும். இந்த சிதைந்த வேர்ப் பகுதியில் கருப்பு அல்லது வெள்ளை நிற பூசண இழை களின் வளர்ச்சி காணப்படும். மேலும் இந்த சிதைந்த பகுதியில் ஸ்கிளிரோஸியம் என்ற வித்துக்களை உண்டு பண்ணி மண்ணில் இருந்து கொண்டு அடுத்த பருவத்தில் பயிரிடப்படும் பருத்தியையும் தாக்கவல்லது.

**<u>அழிக்க வேண்டுகோள்</u>**

இதனைக்கட்டுப்படுத்த முதலில் நோய்த்தாக்கப்பட்ட செடிகளை அழிக்க வேண்டும். பின்னர் பாதிக்கப் பட்ட இடத்திலும் அதனைச் சுற்றி யுள்ள நல்ல நிலையில் உள்ள மற்ற செடிகளின் வேர்ப் பகுதி நனையும்படி டீரைப்ளாக் சிஸ்ட்ரோபின் டெபுகோன சோல் 1 கிராம் லிட்டர் தண்ணீர் அல்லது கார்பன்ட சிம் 1 கிராம், லிட்டர் தண்ணீர், என்ற அளவில் கலந்து பூசண கொல்லிகளின் கரைசலை மண்ணில் ஊற்ற வேண்டும்¢ என பருத்தி ஆராய்ச்சி நிலையம், பேராசிரி யர் மற்றும் தலைவர், வேளாண்மை இணை இயக் குநர் விவசா யிகளை கேட்டுக் கொண்டனர்.

**ரூ.15 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு, துணைத் தலைவர் நல்லதம்பி மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 1000 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.15 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.4ஆயிரத்து 789 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 95 முதல் ரூ.5 ஆயிரத்து 916 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை,

அவினாசி, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**கால்நடை மருத்துவர்கள் தடுப்பூசி போட்டும் தொடர்ந்து பலியாகும் பசுமாடுகள்**



மத்தூர்,

மத்தூர் பகுதியில் கோமாரி நோய்க்கு கால்நடை மருத்துவர்கள் தடுப்பூசி போட்டும் பசுமாடுகள் தொடர்ந்து இறந்து வருவதால் விவசாயிகள் வேதனை அடைத்துள்ளனர்.

**<u>கோமாரி நோய்</u>**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோமாரி நோயால் கால் நடைகள் பாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஊத்தங்கரை, போச்சம்பள்ளி, மத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் 50–க்கும் மேற்பட்ட மாடுகள் கோமாரி நோய் தாக்குதலால் இறந்துள்ளன. 100–க்கும் மேற்பட்ட மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மத்தூர், சாமல்பட்டி, கெரிகேப்பள்ளி உள்ளிட்ட இடங்களில் கடந்த சில நாட்களாக கால்நடை மருத்துவர் பிரபாகரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர், கிராமம் கிராமமாக சென்று அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகிறார்கள். மேலும் கோமாரி பாதித்த மாடுகளுக்கு சிகிச்சையும் அளித்து வருகிறார்கள்.

**<u>விவசாயிகள் வேதனை</u>**

இந்தநிலையில், கால்நடை மருத்துவ குழுவினர் தடுப்பூசி போட்டும் சில இடங்களில் மாடுகள் பலியாகி வருகிறது. மேல் சாமல்பட்டியை சேர்ந்த விவசாயி வெங்கடேசன் வளர்த்து வந்த பசு மாட்டுக்கு கடந்த 2 நாட்களுக்கு முன்பு தடுப்பூசி

போட்டார்கள். இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த மாடு இறந்தது. மற்றொரு மாடு கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இரை எடுத்துக் கொள்ளாமல் உள்ளது. இறந்து போன மாட்டின் மதிப்பு சுமார் ரூ.27 ஆயிரம் இருக்கும் என்று கூறப்படுகிறது. இதேபோல் அப்பகுதியைச் சேர்ந்த முருகன் என்பவர் வளர்த்து வந்த ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள கறவை மாடும் கோமாரி நோய் தாக்கி இறந்தது.

கெரிகேப்பள்ளி ஊராட்சி குள்ளம்பட்டியில் செல்வம், பெருமாள், ரமேஷ் ஆகியோர் வளர்த்து வரும் கறவை மாடுகளும் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடைகள் வளர்த்து வரும் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

இதனால் மத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்கள் நடந்த வேண்டும் என்று சமாஜ்வாடி கட்சி மாவட்ட இளைஞரணி தலைவர் பிரகாஷ்யாதவ் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை**



ஆண்டிமடம்,

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் வரதராசன் பேட்டை பேரூராட்சி பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க கோரி தமிழக முதலமைச்சருக்கு விவசாயிகள், பொது மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

**<u>75ஆயிரம் கால்நடைகள்</u>**

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் அருகே உள்ள வரதராசன்பேட்டை பேரூராட்சிப் பகுதிக்கு உட் பட்ட தென்னூர் ஆரோக்கிய புரம் மேட்டுக் குப்பம், அந்தோணியார்புரம், சராகம், செங்கமேடு, செம்மண்பள்ளம் ஆகிய பகுதிகளை உள்ளடக் கிய 14 வார்டுகள் கொண்ட பகுதியாகும். வரதராசன் பேட்டை பேரூராட்சி 8 ஆயி ரத்து 265 மக்கள் தொகைக் கொண்ட பகுதியா கும்.

வரதராசன்பேட்டை பேரூராட்சி பகுதியில் சுமார் 75 ஆயிரம் கால்நடைகள் மிகுந்த பகுதியாகும். இப்பகுதி மக்கள் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின் றனர். இதனால் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 2 காளை மாடுகள், 2 கறவை மாடுகள், 10 முதல் 15 வரை வெள்ளை ஆடுகள் மேலும் 10 முதல் 15 வரை வளர்ப்பு கோழிகள் மற்றும் வீட்டு செல்லப்பிராணிகளான நாய்கள், பூனைகள், ஆடுகளை வளர்த்து வருகின்றனர்.

## ரூ.53 கோடி கடனுதவிகள்

மாவட்ட அளவில் வரத ராசன்பேட்டை பேரூராட்சி பகுதியில் குறிப்பிட்ட அளவு பால் உற்பத்தி செய்யப்பட்டு 2-வது இடத்தை பெற்றுள் ளது. இந்நிலையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி 2012-13 ஆம் ஆண்டில் தமிழக அளவிலும் அரியலூர் மாவட்ட அள விலும் முதன்முதலாக சிறு பான்மை நலத்துறை சார்பில் கூட்டுறவு வங்கி, நாட்டுடமை வங்கி மூலம் மகளிர் திட்டத்தில் இணைந்துள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.53 கோடி கடனுதவி வழங்கப் பட்டது.

இதில் ஆண்டிமடம் ஒன்றி யத்திற்கு ரூ.13 கோடி கறவை மாடு கடனாக கடனுதவி வழங்கப்பட்டது. இக்கடன் உதவியில் பெரும் தொகையான ரூ.10 கோடி வரதராசன் பேட்டை பேரூராட்சிப் பகுதி 400 பேருக்கு கறவை மாடு கடனாக குறைந்த வட்டியில் வழங்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் தங்கள் வாழ் வாதாரத்தை உருவாக்கிக் கொள்வதோடு பால் உற்பத்தி செய்து அரசு கூட்டுறவு சங்கத் திடம் ஒப்படைத்து வாழ்ந்து வருகின்றனர்.

## நோய்கள்

வரதராசன்பேட்டை பேரூராட்சி பகுதி மக்களால் வளர்க்கப்பட்டு வரும் கால்நடைகளான மாடுகள், ஆடுகள், கோழிகள், வீட்டுச் செல்லப்பிராணிகள் போன்ற கால்நடைகளைத் தாக்கக் கூடிய நோய்களிலிருந்து பாது காத்து பராமரிக்க மற்றும் செயற்கை கருவூட்டல் செய்ய இப்பகுதி மக்கள் இயற்கை வைத்தியம் மற்றும் கால்நடை முகாம்களை நம்பியே உள்ள னர். சிகிச்சைக் காக கால்நடை களை வெகு தூரம் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாலும் கால நேரம் வீணாவதாலும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் கால்நடை மருத்துவ மனை அமைப்பது அவசி யம்.

எனவே கால்நடைகளின் பாது காப்பைக் கருத்தில் கொண்டு வருகின்ற 2014-15 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வரதராசன் பேட்டை பேரூராட்சிப்பகுதி யில் கால்நடை மருத்துவமனை அமைக்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வரதராசன் பேட்டை பேரூராட்சி பொதுமக்கள், விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.